விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 253 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 12 செவ்வாய்க்கிழமை (29.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழில் கொள்ளையில் ஈடுபட்ட கும்பல் பொலிஸாரால் கைது



### 28 பவுண் நகை, மே.சைக்கிள், வாள் கையடக்கத் தொலைபேசிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இரவில் கத்தியைக் காட்டி மிரட்டி நகைகளை கொள்ளை அடித்த கும்பல் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவால் மடக்கிப் பிடிக்கப் பட்ட தோடு திருடப்பட்ட நகைகளும் மீட் கப்பட்டுள்ளது.

15




செல்வச்சந்நிதி ஆலயத்தில்

## அங்கப் பிரதிஷ்டை செய்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அங்கப் பிரதிஷ்டை செய்த ஒருவர் நேற்று உயிரி ழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னையா சுரேஷ்குமார் என்கிற 57

15

## மோ.சைக்கிளிலிருந்து கீழே விழுந்த பெண் மரணம்

### புதுக்குடியிருப்பில் சம்பவம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் மோட்டார் சைக்கிளின் பின்னே அமர்ந்திருந்து பயணித்த குடும்பப் பெண்ணொருவர் கீழே விழுந்து உயிரிழந் துள்ளார்.

இதில் சுஜீவன் வசந்தமலர் (வயது - 28) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே குறித்த விபத்தில் உயிரிழந்தார்.


கடந்த 25ஆம் திகதி குறித்த பெண்,

15

விகாரை நிர்மாணிக்க அனுமதி தருக

# ஆளுநர் அலுவலகத்தில் பிக்குகள் அடாவடி

திருகோணமலையில் பதற்றம்




(திருகோணமலை)

- தீக்குளிப்போம் என பிக்குகள் எச்சரிக்கை.
- விகாரைக்கு அனுமதி தருமாறு ஆளுநர் அலுவலகத்துக்குள் புகுந்து பிக்குகள் கடும் தர்க்கம்.
- கிழக்கு ஆளுநரையும் மிரட்டிய பிக்கு குழுவினர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கை மட்டுமல்ல முழு நாட்டையும் தாயகமாக கருதுக

### தமிழர்களிடம் எல்லே குணவங்ச தேரர் கோரிக்கை



(கொழும்பு)

வடக்கு, கிழக்கை மட்டு மல்ல முழு இலங்கையும் எமது தாயகம்தான் எனக் கருதி இரண்டாவது சுதந்திர போராட்டத்துக்கு தமிழ் மக்கள் முழுமையான ஆதரவைவழங்க வேண்டும் என தேசத்தை பாது காக்கும் தேசிய அமைப்பின் தலை

15

## தையிட்டியில் விகாரையை அகற்ற வலியுறுத்தி

### இன்று கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தையிட்டியில் அமைந் துள்ள சட்டவிரோத விகா ரைக் கட்டுமானத்தை அகற்ற வலியுறுத்தியும் பொதுமக் களது காணிகளை உரிமை யாளர்களிடம் ஒப்படைக்க வலியுறுத்தியும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது.

குறித்த போராட்ட மானது இன்று செவ்

15

ஐ.நா கூட்டத்தொடர்

## இலங்கை தொடர்பாக ஆராய விசேட சந்திப்பு

(கொழும்பு)

பிரித்தானியா தலைமை யிலான இணையனுசரணை நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இலங்கையின் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக் கும் இடையில் இவ்வாரம் நடைபெறவுள்ள சந்திப்பில் இலங்கை தொடர்பான அடுத்த கட்ட நகர்வு கள் குறித்து ஆரா

16

## சட்டவிரோத மீன்பிடி

### 15 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கை அண் மித்த கடல் பகுதிகளில் மேற் கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்புகளின்போது சட்ட விரோத மீன்பிடி நட வடிக்கையில் ஈடு

16

## ரணில் அரசுக்கு எதிராக கொழும்பில் போராட்டம்



(கொழும்பு)

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப் புக்கு EPF/ETF நிதி யங்களை பயன் படுத்த முனைவத ற்கு எதிர்ப் புத் தெரி

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவு செய்யப்படாத தொண்டு நிறுவனங்கள்
# பணிபுரிய அனுமதி இல்லை
### அமைச்சர் டிரான் அலஸ்

(கொழும்பு)

பதிவு செய்யப்படாத தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நாட்டில் பணிபுரிய அனுமதி வழங்கப்படவில்லை என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமையினை கருத்தில்கொண்டு காலி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பில் விரிவான விசாரணைகளை நடத்துவதற்கு காலி உதவி மாவட்ட செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

உதவி மாவட்ட செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டத்தில் பங்கேற்காத நிறுவனங்களின் பதிவுகளை இரத்து செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த அரச சார்பற்ற நிறுவனங்களின் தகவல்களை தேசிய செயலகத்திற்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக காலி உதவி மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சிக்கல் நிலைமைகள் காரணமாக பதிவு செய்யப்படாத அரச சார்பற்ற நிறுவனங்கள் நாட்டில் செயற்படுவதற்கு அனுமதி இல்லை என பாதுகாப்பு அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# பல்கலை மாணவன் நீரில் மூழ்கி உயிரிழப்பு
### மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)



மட்டக்களப்பில் ராஜரட்ட பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவர் ஒருவர் நீச்சல் தடாகத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு கொக்குவில் பகுதியைச் சேர்ந்த முருகதாஸ் திலக்க்ஷன் என்ற 21 வயதுடைய மாணவனே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை அவருடன் மேலும் ஐந்து மாணவர்கள் நீச்சல் தடாகத்தில் இறங்கும் போதே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

ஏனைய மாணவர்கள் அவரை மீட்டு முதலுதவிகளை வழங்கி பல்கலைக்கழக அம்பியூலன்ஸ் மூலம் மிகிந்தலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

# 14 தங்க பிஸ்கட்டுகளுடன் கட்டுநாயக்கவில் வர்த்தகர் கைது

தாய்லாந்திலிருந்து இரண்டு கோடியே எழுபது இலட்சம் ரூபா பெறுமதியான 14 தங்க பிஸ்கட்டுகளை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த வர்த்தகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

வத்தளை மாபொல பிரதேசத்தில் வசிக்கும் 42 வயதான வர்த்தகரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்தின் பாங்கொக்கிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL-405 இல் கட்டுநாயக்க விமான நிலையத்தை சந்தேகநபர் வந்தடைந்துள்ளார்.

அவரது பயணப்பைகளை சோதனையிட்டபோதே 14 தங்க பிஸ்கட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு சுங்க அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான வர்த்தகர் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவரை இம்மாதம் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (ம-7,9)

# பொலிஸ் சார்ஜன்ட் சுட்டுப் படுகொலை

(மாத்தறை)

மாத்தறை மாவட்ட நீதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் T-56 ரக துப்பாக்கியால் மார்பில் சுடப்பட்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக மாத்தறை பொலிஸார் தெரிவித்தனர்.

கெனதுறை தல்பாவில மெதபொல தோட்டத்தைச் சேர்ந்த 54 வயதுடைய பந்துல புஷ்குமார என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவரது மார்பில் இரண்டு முறை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. சடலம் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் சந்தேகத்துக்கிடமான துப்பாக்கி காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# காலியில் கைதிகளை பார்வையிட அனுமதி

காலி சிறைச்சாலையில் கைதிகளைப் பார்வையிடுவதற்கு உறவினர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைதிகளிடையே காய்ச்சல் மற்றும் தோல் தொடர்பான தொற்று பரவியமையினால் கடந்த நாட்களில் கைதிகளைப் பார்வையிடுவதற்கு உறவினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

எவ்வாறாயினும், கைதிகளை வெளியில் அழைத்துச் செல்லும் நடவடிக்கை தொடர்ந்தும் தவிர்க்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

காலி சிறைச்சாலையில் கைதிகளிடையே காய்ச்சல் மற்றும் தோல் தொடர்பான தொற்று பரவியமையினால் 2 கைதிகள் உயிரிழந்ததுடன், 9 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நோய்த்தொற்று தற்போது கட்டுப் படுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கூறினார். (ம-7,9)

# திருமணத்தில் நடனமாடிய இளம் யுவதி உயிரிழப்பு

(கொழும்பு)

திருமண வைபவம் ஒன்றில் நடனமாடிக்கொண்டிருந்த யுவதியொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், உயிரிழந்துள்ளதாக மொரகஹஹேன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹொரணை பதுவிட்ட பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் விற்பனை அதிகாரியாக பணிபுரிந்து வந்த, மஞ்சரி ஆதித்ய பெர்னாண்டோ என்ற 25 வயதுடைய திருமணமாகாத யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த யுவதி, தான் பணிபுரியும் நிறுவனத்தில் ஒருவரின் திருமண நிகழ்வில் கலந்து கொண்டு, அங்கு கூட்டத்துடன் நடனமாடியுள்ளதாக பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த யுவதி மேலும் இரு யுவதிகளுடன் நடனமாடிக்கொண்டிருந்த போது அவ்விடத்தை விட்டு வெளியேறியதாகவும் சிறிது நேரத்தில், சுகயீனமடைந்து ஹொரணை பிரதேசத்தில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு காரில் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஹொரணை வைத்தியசாலைக்கு யுவதியை அழைத்துச் சென்றதையடுத்து, பரிசோதனையின் போது அவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளதாக பொலிஸாரினால் தெரியவந்துள்ளது. (ம-7,9)


## யாழ் நகரில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் கச்சேரிக்கு அண்மையில் 3 1/2 பரப்பு காணி இரண்டு வெட்டு கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு.
55 (SL Rs.) மில்லியனுக்கு மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

(16830)

மின்னஞ்சல் : jamesraj_uk@yahoo.co.uk
+44 796 374 3585 (Whatsapp)
021 222 7141 (Sri Lankan no)



## பெயர் மாற்ற அறிவித்தல்

உரும்பிராய் தெற்கு யோகபுரம் எனும் இடத்தில் வசிக்கும் தயாளன் திநேஸ் ஆகிய எனது பெயரை இன்று முதல் தினேஸ் விக்டர் என பெயர் மாற்றம் செய்கிறேன்.எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
தினேஸ் விக்டர்

(16873)



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் உப அதிபர்
திருமதி உதயமலர் சுரேஷ்குமார்
அவர்களின் அன்புக் கணவர்

அமரர்
செல்லையா சுரேஷ்குமார்

அவர்கள் 28.08.2023 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்

(C-7154)



## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 26 - 04 - 1939



இறப்பு 15 - 08 - 2023


திருமதி. லூதர் சிற்றம்பலம் விமலாதேவி
(Miss. Senathiraja)

எங்களுக்கு அநுராதபுரம் விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்திலும் 1977 இன் பின்னர் தெல்லிப்பழை மகாஜனாவிலும் ஆங்கிலம் கற்பித்த அன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய ஆசிரியை அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்!!!

(C-7150)

என்றும் நினைவுகளுடன்! பழைய மாணவர்கள் சார்பில் தங்கமுகுந்தன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று திங்கட்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் பல அடியவர்கள் கலந்து கொண்டு நேர்த்திக் கடனில் ஈடுபட்டனர். (படங்கள்:-கஜிந்தன்)

# வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் எனில் கொழும்பு சிங்களவர்களின் தலைநகரம்

## யாரும் உரிமை கோர முடியாது என்கிறார் கம்மன்பில



(கொழும்பு)

**வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம் என்றால் கொழும்பு சிங்களவர்களின் தலைநகரம் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை சிங்கள பௌத்த நாடு. இந்த நாட்டில் எந்த இடத்தையும் தமிழர்களுக்குச் சொந்தம் என்று தமிழ் அரசியல்வாதிகள் உரிமை கோர முடியாது.

வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம் அல்ல. அங்கு மூவின மக்களும் வாழ்கின்றார்கள். இந்நிலையில், மூவின மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்கத் தமிழ் அரசியல்வாதிகள் முயல்கின்றார்கள். இதனால் தெற்கிலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

வடக்கு - கிழக்கில் விகாரைகளை நிறுவுதல் பௌத்த மயமாக்கல் எனில் தெற்கில் -கொழும்பில் இந்துக் கோயில்கள் கட்டப்பட்டமை இந்துமயமாக்கலா?

வடக்கு - கிழக்கில் சிங்களவர்கள் குடியேறுதல் சிங்கள மயமாக்கல் எனில் தெற்கில் - கொழும்பில் தமிழர்கள் குடியமர்ந்துள்ளமை தமிழர் மயமாக்கலா? தமிழ் அரசியல்வாதிகள் முதலில் வரலாற்றைப் படிக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

## காண்டாக்ட் லென்ஸ்களுக்கு கடும் தட்டுப்பாடு

(கொழும்பு)

மருத்துவ வழங்கல் பிரிவில் எந்தவிதமான காண்டாக்ட் லென்ஸ்களும் இல்லாததால், எதிர்காலத்தில் கடும் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளதாக அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அவற்றுக்கான அவசர கொள்முதலில் ஈடுபடும்பட்சத்தில் மாதமொன்றுக்கு சுமார் 20 கோடி ரூபா வரை அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படும் என சுகாதார சங்கங்கள் தெரிவிக்கின்றன.

நாடளாவிய ரீதியாக உள்ள மருத்துவமனைகளில் சத்திர சிகிச்சைக்காக மாதத்திற்கு 15, ஆயிரம் காண்டாக்ட் லென்ஸ்கள் இருந்தாலும் வைத்தியசாலைகளில் தற்போது மருத்துவ வழங்கல் துறையால் வழங்கப்பட்ட காண்டாக்ட் லென்ஸ்கள் மற்றும் நன்கொடையாக பெறப்பட்ட காண்டாக்ட் லென்ஸ்கள்மட்டுமே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-5)


2 ஆம் ஆண்டு 8 ஆம் ஆண்டு

நினைவலைகள்



மலர்வு 15 - 09 - 1943

உதிர்வு 21 - 08 - 2021

மலர்வு 21 - 07 - 1943



உதிர்வு 18 - 09 - 2015

அமரர் கந்தன் இரத்தினம் அமரர் கமலாதேவி இரத்தினம்

(ஓய்வுநிலை கிராம அலுவலர், சமாதான நீதவான்-யாழ்ப்பாணம்)(வடமராட்சி தெற்கு ,மேற்கு பிரதேச சபை உறுப்பினர்)

திதி - சதுர்த்தசி 29.08.2023 திதி - 19.09.2023 (பஞ்சமி)

அன்பான எந்தந்தையே பாசமிகு தாயே
உம் பண்பான வாழ்வு எமக்கோர் பாடம்
உயர்வான சிந்தனை கொண்டோரே
இல்லற பேறால் ஏழ் மகவை கண்டு மகிழ்ந்தீர்

தந்தையின் புகழது தரணியை வென்றது
கிராம சேவகராய் பிரதேச சபை உறுப்பினராய்
சமாதான நீதவானாய் சமூக சேவையாளனாய்
நீர் வகித்த பதவிகளும் சேவைகளும்
காரணவாய் பதியத்திற்கு புகழ் சேர்த்ததுவாம்

இறந்தும் இறவாமல் எம் மனங்களதில்
நிலை பெற்றீர் உம் ஆத்மா சாந்திபெற
இறைஞ்சுகின்றோம் இறைவனை


ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(c-7149)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னாபிரிக்க தொடரில் இருந்து மேக்ஸ்வெல் விலகல்



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று ஆட உள்ளது.

இந்த தொடரில் முதலில் இருபது-20 போட்டிகள் நடைபெற உள்ளன. இரு அணிகளுக்கு இடையிலான முதலாவது இருபது-20 போட்டி நாளை நடைபெற உள்ளது. இந் நிலையில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் அவுஸ்திரேலிய அணியில் இருபது-20 மற்றும் ஒரு நாள் அணிகளில் இடம் பெற்றிருந்த அதிரடி ஆட்டக்காரர் க்ளென் மேக்ஸ்வெல் கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக விலகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இருபது-20 தொடர் நிறைவடைந்த பின்னர் அவருக்கு குழந்தை பிறக்க இருப்பதை முன்னிட்டு மேக்ஸ்வெல் ஏற்கனவே அவுஸ்திரேலியா செல்ல திட்டமிட்டிருந்தார்.

இந்நிலையில் அவருக்கு பயிற்சியின் போது காயம் ஏற்பட்டுள்ளது. வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இந்தியாவில் 50 ஓவர் உலகக்கிண்ணத் தொடர் நடைபெற இருப்பதால் அதற்கு அவர் முழு உடற்தகுதியுடன் இருக்க வேண்டும் என்பதால் அவர் குறித்த தொடருக்கான அணியிலிருந்தும் விலகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும், அவருக்கு பதிலாக அணியில் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன் மேத்யூ வேட் சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.(6)

## அல்வாய் ஒற்றுமை வெற்றிக்கிண்ணம் வதிரி டயமன்ஸ் அணி சம்பியன்

பரபரப்பான இறுதிப் போட்டியில் சென் சேவியர் அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வதிரி டயமன்ஸ் அணி சம்பியனாகியது.



அல்வாய் ஒற்றுமை வெற்றிக் கிண்ணத்தின் கால்பந்து இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சந்தை மைக்கல் மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் சென்சேவியர் அணியும் வதிரி டயமன்ஸ் அணியும் மோதின. ஆட்டம் ஆரம்பமாகி சில நிமிடங்களில் பீமா கோல் ஒன்றை பெற்றுக் கொடுத்தார். ஆட்டம் தொடர்ந்து வேகமாக இடம்பெற்றது. முதல் பாதியாட்டம் 1:00 என்ற கோல் கணக்கில் நிறைவுக்கு வந்தது.

இரண்டாம் பாதியாட்டத்தில் சென் சேவியர் அணியின் முன்கள வீரர் சிறப்பான கோல் ஒன்றை போட்டு போட்டியை சமநிலைக்கு கொண்டு வந்தார். தொடர்ந்து விறுவிறுப்பாக இடம்பெற்றுக் கொண்டிருந்தது. போட்டி முடிவு நேரம் சில நிமிடம் இருக்கும் போது டயமன்ஸ் அணியின் முன்கள வீரர் பிரசன்னா அருமையான ஒன்றை போட்டு தமது அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்து சென்றார்.

இறுதியில் 2:1 என்ற கோல் கணக்கில் சற்கோட்டை சென் சேவியர் அணியை வீழ்த்தி வதிரி டயமன்ஸ் அணி சம்பியனாகியது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக டயமன்ஸ் அணி இளம் வீரர் பிரசன்னா தெரிவு செய்யப்பட்டார். மூன்றாம் இடத்தை அல்வாய் நண்பர்கள் அணியும் நான்காம் இடத்தை அல்வாய் மனோகரா அணியும் பெற்றுக் கொண்டனர். (6-60)

## இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்




இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு விதிக்கப்பட்ட தடையை உடன் அமுலுக்கு வரும் வகையில் பிபா நீக்கியுள்ளது.

இந்த வருடம் செபடெம்பர் 29 ஆம் திகதி இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கான தேர்தல் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அதுவரை பிபா மற்றும் ஆசிய கால்பந்து கூட்டமைப்பு ஆகியன நிலைமையை தொடர்ந்து கண்காணிக்கும் என பிபா கவுன்சிலின் பணியகம் அறிவித்துள்ளது. (6)

## உலக சம்பியன்ஷிப் தடகள போட்டி பதக்கப் பட்டியலில் அமெரிக்கா முதலிடம்

19 ஆவது உலக சம்பியன்ஷிப் தடகளப் போட்டியின் முடிவில் அமெரிக்கா பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.



12 தங்கப் பதக்கங்கள், 8 வெள்ளிப் பதக்கங்கள், 9 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 29 பதக்கங்களுடன் அமெரிக்கா முதலிடத்தையும் இதில் 4 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள் என மொத்தம் 6 பதக்கங்களுடன் கனடா பதக்கப்பட்டியலில் இரண்டாவது இடத்தினையும் 4 தங்கப் பதக்கங்கள் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்துடன் 5 பதக்கங்களுடன் ஸ்பெயின் மூன்றாவது இடத்தையும் தடகளப் போட்டிகளில் சிறப்பாகச் செயற்பட்ட ஜமைக்கா 3 தங்கப் பதக்கங்கள், 5 வெள்ளிப் பதக்கங்கள், 4 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 12 பதக்கங்களை வென்று நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது.

50 க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த வீராங்கனைகள் இந்தப் போட்டியில் பங்கு பற்றியுள்ளனர். (6)

## பார்முலா 1 கார்ப் பந்தயம் வெர்ஸ்டப்பென் முதலிடம்



இந்த ஆண்டுக்கான பார்முலா 1 கார்ப் பந்தயம் உலகம் முழுவதும் 22 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதன் 13 ஆவது சுற்று பந்தயமான நெதர்லாந்து கிராண்ட்பிரி அங்குள்ள ஜான்ட்வூர்ட் ஓடுதளத்தில் நேற்று முன்தினம் நடந்தது.

பந்தய தூரம் 306.587 கிலோமீற்றர் இதில் வழக்கம் போல் 10 அணிகளை சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப் பாய்ந்தனர்.

நடப்பு சம்பியனான நெதர்லாந்து வீரர் மேக்ஸ் வெர்ஸ்டப்பென் (ரெட்புல் அணி) 2 மணி 24 நிமிடம் 4.411 விநாடிகளில் இலக்கை கடந்து முதலிடம் பிடித்தார்.

அவருக்கு 25 புள்ளிகள் கிடைத்தது. இந்த சீசனில் அவர் தொடர்ச்சியாக பெற்ற 9 ஆவது வெற்றி இதுவாகும்.

மேலும் முன்னாள் சம்பியன் ஜேர்மனியின் செபாஸ்டியன் வெட்டலின் சாதனையை வெர்ஸ்டப்பென் சமன் செய்தார். ஸ்பெயினின் பெர்னாண்டோ அலோன்சா 2 ஆவதாக வந்து 19 புள்ளிகளையும் பியாரே கேஸ்லி (பிரான்ஸ்) 3 ஆவது இடத்தினையும் பெற்றனர்.

இதுவரை நடந்துள்ள 13 சுற்று முடிவில் புள்ளிப்பட்டியலில் வெர்ஸ்டப்பென் மொத்தம் 339 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார். அவர் தொடர்ந்து 3 ஆவது முறையாக பட்டம் வெல்லும் வாய்ப்பை நெருங்கியுள்ளார். செர்ஜியோ பெரேஸ் (மெக்சிக்கோ) 201 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திலும் அலோன்சா 168 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும் உள்ளனர். 14 ஆவது சுற்று போட்டி இத்தாலியில் செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி இடம் பெறவுள்ளது. (6)

## இலங்கை அணி வீரர்களை பாடாய்ப்படுத்தும் உபாதை

இலங்கை கிரிக்கெட் அணியின் மற்றுமொரு வீரரும் உபாதையால் பாதிக்கப்பட்டுள்ளார்.

நாளை ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், தற்போது வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்கவும் முதுகு உபாதையால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதனால் நாளை மறுதினம் கண்டி பல்லேகலவில் இடம் பெறவுள்ள பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியில் டில்ஷான் மதுங்க பங்கேற்பதில் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இலங்கை அணியின் துஷ்மந்த ஷாமிர தோள்பட்டை உபாதையாலும் வனிந்து ஹசரங்க தொடைப் பிடிப்பாலும் லகிரு குமார காயம் மற்றும் முதுகு வலியாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் குசல் ஜனித் பெரேரா மற்றும் அவிஷ்க பெர்னாண்டோ ஆகியோர் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

துஷ்மந்த ஷாமிரவுக்குப் பதிலாக கசுன் ராஜிதவும் டில்ஷான் மதுஷங்கவுக்குப் பதிலாக பினுர பெர்னாண்டோவும் அணியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் உரிமைகளை அழிக்கும் செயல்களை நிறுத்த வேண்டும்

## கஜேந்திரகுமார் எம்.பி எச்சரிக்கை



(கொழும்பு)

தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் தமிழர்களின் தொல்லியல் அடையாளங்களை அழிக்கக்கூடிய வகையில் செயற்படும் சிங்கள பௌத்தர்களின் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெற்கில் அனுபவிக்கும் சுதந்திரத்தை தாம் வடக்கில் அனுபவிப்பதற்கு இடமளிக்க வேண்டுமென" வலியுறுத்தி பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தலைமையிலான குழுவினர், அவரது கொழும்பு இல்லம் முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எமது செயற்பாடுகள் அனைத்தும் வெளிப்படைத்தன்மை வாய்ந்தவையாக இருக்கின்றன.

அதேபோன்று தமது கருத்துக்களை வெளிப்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான உரிமை சகலருக்கும் உண்டு. அதனை நாம் மறுதலிக்கவில்லை. அதேவேளை நாம் ஒருபோதும் சிங்கள பௌத்தத்துக்கு எதிரானவர்கள் அல்ல.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நீண்ட காலமாக மதவழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் பௌத்த விகாரைகளை அப்புறப்படுத்துமாறு நாம் கோரவில்லை.

மாறாக எமது மக்களின் உரிமைகளைப் பறிக்கக்கூடிய வகையிலும் தமிழர்களின் தொல்லியல் அடையாளங்களை அழிக்கக்கூடிய வகையிலும் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளையே நிறுத்துமாறு வலியுறுத்துகின்றோம்.

தொல்பொருள் சின்னம் அல்லது பௌத்த சின்னம் என்ற பெயரில் தமிழ் மக்களின் அடையாளங்களையும் சரித்திரத்தையும் அழிப்பதற்கோ அல்லது மாற்றியமைப்பதற்கோ நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். அதனை முன்னிறுத்தியே நாம் செயற்பட்டு வருகின்றோம் எனத் தெரிவித்துள்ளார். (நி)





### நல்லை நகர் நாயகனே போற்றி

கந்தரலங்கார மனுபூதி கவிவெண்பா
சந்தத்திருப்புகழுடன் கந்தபுராணமும்
ஓதும் அடியவர்க்கு
வந்த வினைகள் யாவும் போக்கி
வளமுள்ள வாழ்வு தரும்
நல்லை நகர் நாயகனே போற்றி போற்றி

இ.சிவசங்கர்
(ஓய்வு நிலை அதிபர்)

### நாடினேன் நல்லையம்பதியை

தேடினேன் உன் திருவடியையே -முருகா
நாடினேன் நல்லையம்பதியையே
திருவருள் பெற்றிடவே- நல்லைக்குமரா
உன்னை தொழுது பாடும் சிவபாக்கியம்
பாரினிலே தேடினேன்-மாயோன் மருகா
மாய இருள் விலக அருள்வாயே
அடியேனை கைவிட்டு
அன்பிலாதிருப்பதோ-அழகனே
உனக்கு அழகாகுமோ
நல்லூர் தேரடியில் தேசிகனை
நான் கண்டேன்- நானிலம்
காத்தருள்வாயே.



லோ. சிவதர்ஷினி
உரும்பிராய்.


### ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம்-2023

**தற்காலிக கடை இட ஒதுக்கீடு**

ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 14.09.2023 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தலத்தில் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. கடைகள் தொகுதி வாரியாகப் பின்வரும் வகையில் அமையும்.

1. ஐஸ்கிறீம்
2. இனிப்பு வகை
3. தேநீர் கடை
4. மணிக்கடை
5. கச்சான் கடை

(அ-7151)

முக்கிய குறிப்பு-

- முதல் மூன்று கடைத் தொகுதிகளுக்குமான இடம் பகிரங்க ஏலத்தில் கூடிய கூறுவிலைக்கு வழங்கப்படும். ஏனைய தொகுதிக்கான அறவீடு அடிக்கணக்கில் அறவிடப்படும்.
- அக்கறையுடைய வர்த்தகர்கள் முன்கூட்டியே இட ஒதுக்கத்தைப் பெற்று தொடர்பான வாடகைப் பணத்தை முழுமையாகச் செலுத்தி உங்கள் இடங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- விபரங்கள் வழங்க வேண்டிய படிவங்களை கோவில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- ஏலம் போடும் நாள் 01.09.2023 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணி.

துன்னாலை வடக்கு, புலோலி. தொலைபேசி: 021 226 3074 அறங்காவலர் சபை.


### பால்மா விலை மீண்டும் அதிகரிப்பு?

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற பால்மா வகைகளுக்கு வழங்கப்பட்டு வந்த வரிச்சலுகை நீக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கிலோவுக்கு 25 சதவீத அல்லது 225 ரூபாய் என்ற வரிச்சலுகை வழங்கப்பட்டு வந்த நிலையில் அது மீண்டும் அமுலுக்கு வருகிறது.

இதனால் இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளின் விலைகள் உள்நாட்டு சந்தையில் 200 ரூபாவால் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## இராசிபலன்

29.08.2023
ஆவணி 12, செவ்வாய்க்கிழமை
திரயோதசி பிற்பகல் 1.14 மணிவரை
திருவோணம் முன்னிரவு 11.41 மணிவரை

சுபநேரம் -10.35-12.05 மணிவரை
இராகுகாலம்-3.05-4.35 மணிவரை
நடேசர் அபிசேகம்

சந்திராஷ்டமம்- திருவாதிரை, புனர்பூசம்.

வளவன்

**மேஷம்** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்,வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புதியபொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**மகரம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, பொது நலனில் அக்கறை கூடும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன நன்மையுண்டு.

**ரிஷபம்** அரை குறையாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்,குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும்.

**சிம்மம்** சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும்,செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், பகைவர்கள் மனம் மாறுவர்.

**விருச்சிகம்** விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பொதுவாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,வளர்ச்சி கூடும் நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்,பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்** மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது,கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**கன்னி** மன நிறைவு கூடும் நாள்,நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**தனுசு** எதிர்பாராத தன வரவுகள் வந்துசேரலாம், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்,போசன சுகமுண்டு.

**மீனம்** வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

நீண்ட காலம் வாழ விரும்பினால் இதயத்தை திற.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொள்ளை அடித்தவர்கள் சுகபோக வாழ்க்கை தொழிலாளர்கள் பலிக்கடாவா?

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு; எதிர்ப்பு தெரிவித்து யாழில் போராட்டம்




**(யாழ்ப்பாணம்)**

**உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு ஈ.பி.எப், ஈ.ரி.எப் நேற்று நிதியங்களைப் பயன்படுத்த முனைவதற்கு எதிராக யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்னால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.**

அமைச்சரவையில் 2023 ஜூலை 1 ஆம் திகதி நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட பரிந்துரையின் மூலமாக ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதி, நிதிகளை உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்குப் பயன்படுத்த அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தினை நடைமுறைப்படுத்த முனைவதன் மூலம் ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதி நிதியங்களில் கணக்குகளைக் கொண்டுள்ள சுமார் 25 இலட்சம் உழைக்கும் வர்க்க அங்கத்தவர்களின் ஒரே யொரு ஓய்வூதியச் சேமிப்பினை அவர்களின் அனுமதியின்றி பயன்படுத்த அரசாங்கம் முயல்கின்றது என்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கம், வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம், வடமாகாண கால்நடை போதனாசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா தபால் தொலைதொடர்பு சேவை உத்தியோகத்தர் சங்கம், வடமாகாண அரச சாரதிகள் சங்கம், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கம் ஆகிய 9 தொழிற்சங்கங்கள் போராட்டத்திற்கு ஆதரவளித்தன. (நி-6-33-104)

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சையினை யாழ்.போதனா வைத்தியசாலையில் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்களுக்கான சத்திரசிகிச்சைகள் கண்சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மலரவன் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண்பரிசோதனை முகாம் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குரிய யூபிலிகிளினிக் நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

அதேபோன்று நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினைச் சேர்ந்த கண் புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிதொடக்கம் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் நடைபெறவுள்ளது. குறித்த முகாமில் கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத் தரப்படும்.

கண்புரை சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய வைத்திய சாலைகளில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கும் சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் சுகாதார திணைக்களத்தினரால் இலவசமாக மேற்கொள்ளப்படும்.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (நி-6)



உடுப்பிட்டி கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய இரு மாணவர்களுக்கு எள்ளங்குளம் இராணுவ முகாம் கட்டளைத் தளபதியினால் வங்கிக் கணக்குப் புத்தகம் கையளிக்கும் நிகழ்வு நவிண்டில் கலைமதி சன சமூக நிலைய கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (படம்- மகாலிங்கம்)

# மீசாலையில் ரூ.7 இலட்சம் மதிப்பிலான தேக்க மரக்குற்றிகள் மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை மூலமாக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலைப் பகுதியில் வைத்து நேற்று திங்கட்கிழமை காலை 7 இலட்சம் ரூபாய் பெறுமதியான தேக்க மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன.



கனகராயன்குளம் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி டிப்பர் வாகனத்தில் கருங்கல் கிரவலுக்குள் மறைத்து எடுத்து வரப்பட்ட 22 தேக்க மரக் குற்றிகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதுடன் வாகன சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீசாலை பகுதியில் கடமையில் நின்றிருந்த போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாரே குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சந்தேகநபர் பொலிஸாருக்கு 5 இலட்சம் ரூபாய் இலஞ்சம் வழங்க முற்பட்ட போதிலும் கைது நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினரே குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். கைதான சந்தேக நபர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6-30)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் நல்லூர் உற்சவ கால தெய்வீக இசையரங்கு நிகழ்வில் நாளை புதன் கிழமை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் தேஜஸ்வராலயா கலைக்கூட மாணவர்களின் குழு இசை இடம்பெறவுள்ளது.

இதில் வயலின்-ஈ.வனஜா, மிருதங்கம்-க.சிவகுமார், ஹார் மோனியம்-ந.செல்வச்சந்திரன் ஆகியோர் பங்கு பெறவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு- ஆரூரன் அருணந்தி, வயலின்-சு.தீபா கரன், மிருதங்கம்-ர.அபிநவ், கஞ்சிரா- ர.ரட்ணம் மற்றும் முகர்சிங்- சிவ.சக்திதரன் ஆகியோர் பங்குபெறவுள்ளனர். (நி-6)

# தெய்வீக திருக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் 9 ஆம் நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை மாலை 4.15 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கணக்காளர் அழகுராஜா நிர்மல் தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி. சுபாசினி மதியழகன் பிரதம அதிதியாகவும் யாழ். பல்கலைக்கழக சைவசித்தாந்த துறைத் தலைவர் கலாநிதி திரு. பொன்னுத்துரை சந்திரசேகரம் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச பராசக்தி அம்மன் , சிவபூரணி முத்தமிழ் மன்ற, நாகலிங்கேஸ்வரர், நவமங்கஜ நிவாச அறநெறி பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகள் கோப்பாய் பிரதேச செயலக, இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. வி.மகிந்தினி "வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை" என் னும் கருத்துரை இடம்பெறவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் திரு .செ.லோகேஸ் வரனின் "யாழ்ப்பாணத்து ஞானிகள் " என்னும் விடயப் பொருளில் சிறப்புரை மற்றும் ஞானஏந்தல் மா.ந.பரமேஸ்வரனின் திருப்புகழ்க் கச்சேரியும் இடம்பெறவுள்ளன. (நி-6)

# நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர்.வி.தர்மலிங்கத்தின் 38 ஆம் ஆண்டு நினைவு தினம் செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு தாவடியில் அமைந்துள்ள அவரின் நினைவுத் தூபியில் வலி.தென் மேற்கு பிரதேசசபை முன்னாள் உப தவிசாளர் கந்தரோடை ஓய்வு பெற்ற உப தபாலதிபர் ஆ.சி.கணேசவேல் ஜே.பி தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் நிலவும் வறட்சியால் சுமார் 10,000 ஏரிகள் பாதிப்பு

## விவசாய அமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தற்போது நிலவும் வறட்சியால் நாட்டில் உள்ள 10,000 இற்கும் மேற்பட்ட ஏரிகள் முற்றாக வறண்டு விட்டதாகவும் அனைத்து பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 35-40 வீதத்தால் குறைந்துள்ளதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



விவசாயத் துறைக்கு கிடைத்த நிதி ஒதுக்கீட்டின்படி, பருவ மழைக்கு முன், பழுதடைந்த குளங்களை சீரமைக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது நிலவும் எல் நினோ செயல்முறை காரணமாக, அடுத்த பருவத்தில் நல்ல மழை பெய்யும் என்றும் அதற்குப் பின்னர் அடுத்த பருவத்தில் மீண்டும் வறட்சி இருக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

எனவே, பருவமழைக்கு முன் இந்தக் குளங்களை சீரமைப்பதன் மூலம் அதிக தண்ணீரை தேக்கி, விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு பெரிதும் தீர்வு காண முடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# கிழக்கு ஆளுநருக்கு எதிராக பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம்



(திருமலை)

திருகோணமலை இலுப்பைக் குளம் பகுதியில் அமைக்கப்பட்ட பொரலுகந்த ரஜமகா விகாரைக்கு தடை விதித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பௌத்த பிக்குகள் மற்றும் சில பொதுமக்கள் நேற்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பகுதியில் விகாரை அமைப்பதற்கு எதிராக தமிழ் மக்களினால் முன்வைத்த கோரிக்கையை பரிசீலித்த கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் ஜனாதிபதியினால் அப்பகுதியில் அமைக்கப்பட்ட விகாரையின் கட்டுமானங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு முன்னால் ஏ6 பிரதான வீதியை வழிமறித்து கிழக்கு ஆளுநருக்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறும் பதாகைகளை ஏந்தியவாறும் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (நி)

# ஒன்லைன் மோசடிகள் தொடர்பில் மக்களே! அவதானமாக இருங்கள்

## இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

ஒன்லைன் மோசடிகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு இலங்கை மத்திய வங்கி பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

மக்கள் உழைத்து சம்பாதித்த செல்வத்தை இழக்க நேரிடும் என்பதால் இவ்வாறான மோசடிகள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏதேனும் தெளிவுபடுத்தல் தேவைப்பட்டால், அந்த பிரச்சினைகளை cbslgen@cbsl.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப முடியும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி-5)

# விடைத்தாள் மதிப்பீட்டு கொடுப்பனவு அமைச்சரவை பத்திரம் முன்வைப்பு

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் நாளாந்த கொடுப்பனவை அதிகரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் தற்போது முன்வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தவுடன் உரிய தீர்மானம் உடனடியாக அமுல்படுத்தப்படும் எனவும் கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-5)

# வரலாற்று பொருட்கள் மீளளிப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(கொழும்பு)

கண்டி அரச மாளிகையை ஒல்லாந்தர் கைப்பற்றிய சந்தர்ப்பத்தில், அவர்கள் தமது நாட்டுக்கு எடுத்துச் சென்ற வரலாற்றுப் பெறுமதிமிக்க 6 தொல்பொருட்களை மீள நாட்டுக்கு கொண்டு வருவது தொடர்பான இரண்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட உள்ளன.

1765 ஆம் ஆண்டில், கண்டியில் உள்ள அரச மாளிகையை கைப்பற்றிய ஒல்லாந்தர்கள் அங்கிருந்து வரலாற்று பெறுமதி மிக்க பொருட்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இலங்கை மற்றும் நெதர்லாந்தைச் சேர்ந்த அறிஞர்கள் குழு நடத்திய ஆய்வின்படி, நெதர்லாந்தில் உள்ள ரிஜ்க்ஸ் நூதனசாலையில் இலங்கைக்கு உரித்தான புகழ்பெற்ற லெவ்கே திசாவா பீரங்கி, இரண்டு தங்கம் மற்றும் வெள்ளி துண்டுகள், கத்திகள், இரண்டு துப்பாக்கிகள் என்பன காணப்படுவதாக தெரியவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 188

### செஸ்டர்கீரின் அறிமுகம் செய்த...




ஒரு மாணவன் முழு ஆண்டுத் தேர்வில் அனைத்துப்பாடங்களிலும் சித்தியடையாமையால், தலைமை ஆசிரியரிடம்அனுப்பப்பட்டான்.

தலைமைஆசிரியருக்கு கோபம் வந்துவிட்டது. இந்தப்பள்ளியில் பத்து வருடமா படிச்சிருக்கிட்டிருக்க ஒவ்வொரு வருடமும் இதே நிலைதான் இந்த வருடம் ஒரு பாடத்துல கூட பாசாகலை.

வகுப்புல பாடம் நடத்தும் போது நீ என்ன காதுல பஞ்சு வெச்சு அடைச்சுகிட்டிருந்தியான்னு கோபமாக திட்டினார்.

அந்தப்பையன் அமைதியாக நின்றிருந்தான்.

இனி நீ படிக்க லாயக்கே இல்லை என்று டி.ஸி. கொடுத்து அனுப்பி விட்டார். அந்த பையன் தெருவில் இறங்கி நடந்தான்.

உன் காதில் என்ன பஞ்சா அடைத்து வெச்சிருக்கே? என்ற அந்த வார்த்தை காதில் ஒலித்துக்கொண்டே இருந்தது. உடனே தன் காதுகள் இரண்டையும் நன்றாக மூடினான்.

அமைதியான அந்த உலகம் அவனுக்கு வித்தியாசமாகத் தெரிந்தது. ஒரு புதிய சிந்தனை உருவானது.

தலைமையாசிரியர் சொன்னது போல் பஞ்சு வைத்து காதை அடைத்துப்பார்த்தான். ஒரு புது சாதனத்தை வடிவமைத்தான்.

அதன் பெயர் இயர் மஃப் பரீட்சைக்கு படிக கிறவர்கள் தொந்தரவின்றி படிக்க வாங்கினார்கள். இரைச்சலான இடங்களில் வேலை செய்பவர்கள் வாங்கினார்கள். ஓரளவுக்கு வியாபாரம் நடந்தது.

அந்தச் சமயம் முதலாம் உலகப் போர் ஆரம்பமானது. பீரங்கிச் சத்தத்தினால் காது செவிடாகாமல் தடுக்க இயர் மஃப் கட்டாயம் அணிய வேண்டும் என அதிகாரி உத்தரவிட்டார்.

போர்வீரர்களுக்கு வசதியாக ஹெல்மட்டில் வடிவமைத்து கொடுத்தான். கோடீஸ்வரனானான்.

அவர் பெயர் செஸ்டர்கீரின் வுட்.

வாழ்வின் வெற்றிக்கு படிப்புதான் அவசியம் என்பதில்லை.

வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்வது தான் வெற்றியின் இரகசியம்...

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## மேற்கு வங்கத்தில்
# பட்டாசு ஆலை விபத்தில் 8 பேர் உயிரிழப்பு



(டில்லி)

கொல்கத்தா மேற்கு வங்கத்தில் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேற்கு வங்க மாநிலம் 24 பர்கானா மாவட்டத்தில் உள்ள துத்தாபுகூர் பகுதியில் இயங்கி வந்த பட்டாசு ஆலையில் நேற்று முன்தினம் முற்பகல் 10.40 மணி அளவில் பயங்கர சத்தத்துடன் வெடி விபத்து ஏற்பட்டது.

இதில் 8 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தகவல் அறிந்ததும் தீயணைப்பு படையினர் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தால், அருகில் உள்ள பல கட்டடங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த பட்டாசு ஆலை அனுமதி இன்றி இயங்கி வந்ததாக உள்ளூர் மக்கள் குற்றம் சாட்டினர்.

ஒரே இடத்தில் அதிக பட்டாசுகளை சேமித்து வைத்த ததே விபத்துக்கு காரணம் என மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உரிய அனுமதி இல்லாமல் அந்த ஆலை இயங்கி வந்து ள்ளது. அதிகாரிகள் இது குறித்து விசா ரணை நடத்தி வருகின்றனர். (நி-5)

# இரு பிரிவினரிடையே
# 5 வீடுகள் தீயிட்டு எரி
## மணிப்பூரில்



(டில்லி)

மணிப்பூரின் தலைநகர் இம்பாலில் இரு பிரிவினரிடையே ஏற்பட்ட வன்முறையில் நேற்று முன்தினம் 5 வீடுகள் தீயிட்டு எரிக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் தீ வைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி

# 'லிவா மிஸ் திவா யுனிவர்ஸ்' பட்டத்தை வென்றார் ஸ்வேதா



(டில்லி)

மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'லிவா மிஸ் திவா யுனிவர்ஸ் 2023' அழகிப் போட்டியில் 'ஸ்வேதா சாரதா' என்ற இளம் யுவதி பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார்.

11 ஆவது ஆண்டாக நடைபெறும் இப்போட்டியில் வெற்றி பெற்ற ஸ்வேதாவுக்கு முன்னாள் பிரபஞ்ச அழகியான சோனல் குக்ரஜா மகுடம் சூட்டினார். சுமார் 160 பெண்கள் பங்கேற்ற குறித்த போட்டியில் இறுதிச் சுற்றில் 16 பேர் தேர்வுசெய்யப்பட்டனர். திருமணமானவர்கள், விவாகரத்து பெற்றவர்கள், கர்ப்பிணிகள், மூன்றாம் பாலினத்தவர் உட்பட அனைவருக்கும் இப் போட்டியில் பங்கேற்க அனுமதியளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# நேட்டோ அமைப்புக்கு எதிராக ஜேர்மனியில் பாரிய போராட்டம்

(பிரசெல்சு)

**உலகம் முழுவதும் போர்களை நேட்டோ நடத்தி வருவதாக தெரிவித்து அந்த அமைப்புக்கு எதிராக ஜேர்மனியில் பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.**




தனது சொந்த நலனுக்காக உலகம் முழுவதும் போர்களை நேட்டோ அமைப்பு நடத்தி வருவதாகவும் குறிப்பாக ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே இடம்பெற்று வரும் மோதலை நேட்டோ அமைப்பு தொடர்ந்து தூண்டிவிட்டு வருவதாகவும் தெரிவித்தே இப்போராட்டம் கடந்த சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது "போர் வேண்டாம், அமைதியே வேண்டும், ஆயுதங்கள் அமைதியைத் தராது" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்பேரணியில் அமெரிக்கா மற்றும் பிற மேற்கத்தேய நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்களை அனுப்பி அந்நாட்டுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி வருவதாகவும் அதனை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

மேலும் பொருளாதாரப் பாதிப்பு, பணவீக்கம் என அடுத்தடுத்து பல பிரச்சினைகளை ஜேர்மனி சந்தித்து வரும் நிலையில் உக்ரைனுக்கு ஜேர்மனி ஆயுத உதவி வழங்கி வருவதாகவும் போராட்டக்காரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (நி-5)

# ...யே வன்முறை; ...எரிக்கப்பட்டன!

## ...இல் மீண்டும் பதற்றம்

பெரும் திரளான மக்கள் அப்பகுதியில் குவிந்ததால் பதற்றமான சூழல் நிலவியுள்ளதாகவும், இதனையடுத்து அங்கு பாதுகாப்புப் படைகள் குவிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே வேறொரு இடத்தில் வன்முறைக் கும்பல் பொலிஸாரைத் தாக்கி துப்பாக்கிகளைப் பறித்துச் சென்றுள்ளதாகவும், இதனையடுத்து துப்பாக்கிகளை மீட்கவும் வன்முறையாளர்களைக் கைது செய்யவும் பொலிஸார் தனிப்படைகளை அமைத்து தேடி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# முஸ்லீம் மாணவர்கள் 'அபாயா' அணியத் தடை

## பிரான்ஸ் கல்வி அமைச்சு தீர்மானம்

(பாரிஸ்)

பாடசாலை செல்லும் முஸ்லீம் மாணவர்கள் உடலை முழுமையாக மறைக்கும் அபாயா ஆடை அணிவதற்கு பிரான்ஸ் அரசு தடை விதித்துள்ளது.

பல விடயங்கள் தொடர்பில் கவனத்தை ஈர்த்து பாடசாலை மாணவர்கள் அபாயா ஆடைகளை அணிவதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பிரான்ஸ் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில், பாடசாலைகளுக்கு தொடர் விசேட வழிகாட்டுதல்களை வழங்க அந்நாட்டு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பிரான்ஸ் அரசாங்கம் 2004 ஆம் ஆண்டு பாடசாலைகளில் தலையை மூடும் வகையில் ஆடைகளை அணிய தடைசெய்ததுடன், 2010 ஆம் ஆண்டில் முழுமையாக முகத்தை மூடுவதைத் தடைசெய்ய நடவடிக்கை எடுத்தது என்று வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. (நி-5)

# சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு புதிய விண்வெளி வீரர்கள் குழு

(வோஷிங்டன்)

புதிய விண்வெளி வீரர்கள் குழுவொன்று சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்துடன் சேர்ந்து நாசா விண்வெளி நிலையம் முன்னெடுத்திருந்தது.

அதன்படி, நேற்று முன்தினம் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து 4 விண்வெளி வீரர்களுடன் பால்கன் 9 விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக நாசா நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தநிலையில், பூமியில் இருந்து பால்கன் 9 ராக்கெட் மூலம் 4 வீரர்களுடன் அனுப்பப்பட்ட டிராகன் விண்கலம், நேற்று முன்தினம் சர்வதேச விண்வெளி நிலையத்தை சென்றடைந்ததாக நாசா நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்து உள்ளன.

பூமியில் இருந்து 410 கிலோ மீற்றர் உயரத்தில் இயங்கி வரும் இந்த விண்வெளி நிலையத்தில் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் பிற உறுப்பு நாடுகளை சேர்ந்த விண்வெளி வீரர்கள் சுழற்சி முறையில் அங்கு தங்கியிருந்து ஆய்வு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.



இதற்காக அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா, அமெரிக்காவின் தனியார் விண்வெளி நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸுடன் இணைந்து. விண்வெளி வீரர்களை சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பி வருகிறது.

இறுதியாக கடந்த மார்ச் மாதம் 4 விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பப்பட்டனர்.

அவர்களின் 6 மாத பணிக்காலம் விரைவில் முடிவடையவுள்ள நிலையில், அவர்களுக்கு பதிலாக புதிய விண்வெளி வீரர்கள் குழு நேற்று முன்தினம் சர்வதேச விண்வெளி நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் வறட்சியால் குடிநீர் நெருக்கடி

(கண்டாவளை)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடரும் வறட்சி காரணமாக பல்வேறு இடங்களிலும் குடிநீர் நெருக்கடி காணப்படுவதுடன் கால்நடைகளும் குடிநீருக்கு அலையும் நிலை காணப்படுகின்றன.

தற்போது நிலவும் வறட்சி காரணமாக பல்வேறு பகுதிகளிலும் குடிநீர் நெருக்கடி காணப்படுவதுடன் பல்வேறு வகையான பாதிப்புக்களும் காணப்படுகின்றன.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் அம்பலப்பெருமாள் குளம், ஆரோக்கியபுரம், அமைதிபுரம், கோட்டைகட்டி, துணுக்காய், ஆலங்குளம் ஆகிய பகுதிகளில் நிலவும் வறட்சி காரணமாக குடிநீர் நெருக்கடி காணப்படுகின்றது.

அதேபோல் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பல பகுதிகளிலும் வறட்சி காரணமாக அதிகளவான பாதிப்புகள் காணப்படுகின்றன.

குறிப்பாக அன்றாடத் தேவைக்கான குடிநீர் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பூநகரி பிரதேசத்தின் பல இடங்களில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் குறித்த பகுதிகளில் தொடர்ந்தும் வறட்சி நிலை காரணமாக குடிநீர் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதோடு

மேலும் பூநகரி பகுதியில் உள்ள நீர்நிலைகள் வற்றி காணப்படுவதனால் கால் நடைகளுக்கான குடிநீர் இல்லாத நிலை காணப்படுவதுடன் கால்நடைகள் குடிநீர் தேடி அலையும் அவல நிலை காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். (நி-6-315)

காணி விடுவிப்பு விவகாரம்;

# குருந்தூர் மலைக்கு அதிகாரிகள் கள விஜயம்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை பகுதியில் தமிழ் மக்களினுடைய பூர்வீக காணிகள் தொல்பொருள் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த காணிகள் விடுவிப்பது தொடர்பில் குறித்த பகுதிக்கு நேற்று அரசியல் தலைமைகள் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்தனர்.

குருந்தூர் மலை பகுதியிலே 1933.05.12 அன்று வர்த்தமானி ஊடாக 78 ஏக்கர் 2 ரூட் 12 பேர்ச் காணிகள் தொல்பொருள் திணைக்களத்திற்காக எடுக்கப்பட்டிருந்தது.

தற்போது குறித்த பகுதியில் தமிழ் மக்கள் வாழ்ந்த பூர்வீக காணிகள், வயல் நிலங்கள் உள்ளடங்கலாக மேலும் 306 ஏக்கர் காணிகளை தொல்பொருள் திணைக்களம் அபகரிப்பதற்காக எல்லை கற்களை போட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 16 ஆம் திகதி அன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற திணைக்களங்களால் அபகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பான விசேட கலந்துரையாடலின் போது குறித்த பகுதியை நேரடியாக விஜயம் செய்து இது தொடர்பில் முடிவெடுப்பது என தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய நேற்று குறித்த பகுதிக்கு விஜயம் செய்திருந்த முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சி.குணபாலன், கரைதுறைப் பற்று பிரதேச செயலாளர் ம.உமாமகள் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தினுடைய மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் உதவிப் பணிப்பாளர் ஆர்.டி.ஜெயதிலக, மாவட்ட வனவள பாதுகாப்பு திணைக்களத்தினுடைய அதிகாரிகள், நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், கமநல சேவை திணைக்கள அதிகாரிகள், நில அளவை திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்கள் துறை சார்ந்த அதிகாரிகள் உள்ளிட்ட கிராம மக்கள் சென்று நேரடியாக குறித்த காணிகளை பார்வையிட்டிருந்தனர்.

இருப்பினும் குறித்த காணிகளில் விடுவிக்க கூடிய காணிகள் தொடர்பில் எந்தவிதமான சாதகமான பதில்களும் எட்டப்படாத நிலையில் இன்றைய அவதானிப்புகளின் அடிப்படையில் குறித்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் மற்றும் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் ஆகியோருக்கு தெரியப்படுத்தி அதனூடாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக அங்கு தீர்மானிக்கப்பட்டது. (நி-6-299)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு, கேணிக் குளம்பதி லிங்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

தேர்த்திருவிழா செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி திங்கட்கிழமையும் தீர்த்தோற்சவம் செவ்வாய்க்கிழமையும் பூங்காவனத்திருவிழா புதன்கிழமையும் நடைபெறுவதோடு 14 ஆம் திகதி வியாழக்கிழமை விநாயகப் பெருமான் மாலை தெருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும் என ஆலயப் பிரதம குருக்கள் சிவஸ்ரீ பா.கேசவக்குருக்கள் தெரிவித்துள்ளார். (நி-6)

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்கு அருள்மிகு ஸ்ரீமனோன்மணி அம்பாள் சமேத சிவ மகேஸ்வரர் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 13 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10,11,12 ஆம் திகதிகள் முறையே சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது என்று ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (நி-6)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

"வரலாற்று ஆய்வுகளும் மானுட மேம்பாடும்" என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட விசேட கலந்துரையாடல் நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (நி-6)

## லட்சத்திற்கு ஏலம் போன மாம்பழம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-நாவற்குழி அருள்மிகு சித்திவிநாயகர் திருக்கோவிலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாம்பழம் ஒன்று ஒரு இலட்சத்து எழுபதாயிரம் ரூபாய்க்கு ஏலத்தில் பெறப்பட்டுள்ளது.

ஆலயத்தின் மாம்பழத் திருவிழா தினத்தன்று பிள்ளையாரின் திருவடிகளில் வைக்கப்பட்ட மாம்பழமே இவ்வாறு ஏலத்தில் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

# கொக்குவில் மஞ்சவனப்பதி முருகனுக்கு இன்று தேர்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாளை புதன்கிழமை தீர்த்தோற்சவமும் நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் வெள்ளிக்கிழமை மாலை அலங்காரத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (நி-6)

# சாவகச்சேரி சித்திவிநாயகர் கலைமன்ற முத்தமிழ் விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பெரியமாவடி சித்திவிநாயகர் கலைமன்றத்தின் முத்தமிழ் விழா நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.05 மணிக்கு நிலையத் தலைவர் மு.கதிரவேலு தலைமையில் ஆரம்பமாகவுள்ளன.

திருமதி.கதிரவேலு வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் உஷா சுபலிங்கம், சிறப்பு விருந்தினராக யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் மற்றும் கௌரவ விருந்தினராக சங்கத்தானை கிராம அலுவலர் ம.அமலதீபன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

முத்தமிழ் விழாவில் சிறப்பு நிகழ்வுகளாக நிலையத்தின் மூத்த உறுப்பினர்கள் கௌரவிப்பு, பரிசளிப்பு வைபவம் ஆகியவற்றுடன் கண்ணன் நடனம்,தனி நடனம்,கூத்திசை, கர்நாடக இசைக் கச்சேரி,ருத்த சிவதாண்டவம்,என்னவென்று சொல்வேனடி நாடகம்,இசை நிகழ்வு,கனிந்த இரவுகள் நாடகம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளும்இடம்பெறவுள்ளன.(நி-6-30)

# யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரியில் விழிப்பூட்டல் கருத்தரங்கு



(யாழ்ப்பாணம்)

சார்க் ஊடக மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரியில் "ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கு இடம்பெற்றுள்ளது. கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் வளவாளர்களாக, வைத்திய அதிகாரி மருத்துவர் கே.உதயசீலன், யாழ்.பல்கலைக்கழக உளவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவர் கே.கஜிந்தன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

தற்போதைய சூழலில் இளவயதில் இருக்கும் மாணவிகளாகிய நீங்கள், உடனடியான கனதியான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அதேவேளை சமூகத்தில் தற்போது நிகழ்கின்ற நெறி தவறிய போக்குத் தொடர்பிலும் விழிப்பூட்டல் கருத்துக்களை முன்வைத்தனர். (நி-6)

# வடக்கு மாகாண தென்னை முக்கோண வலய அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கி 02.09.2023 சனிக்கிழமை காலை 8 மணிக்கு சர்வதேச தென்னை விழாவானது பிராந்திய காரியாலய தென்னைப் பயிர்ச்செய்கை சபைக்கு அண்மையிலுள்ள தர்மக்கேணி காணியில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் இடம் பெறவுள்ளது.

அத்துடன் இந்நிகழ்வில் தென்னை பற்றிய புதிய தொழில்நுட்ப செயல்முறை விளக்கங்கள், கைத்தொழில் செயல்முறை பயிற்சிகள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களினாலும் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் வடமாகாணத்திற்கும் தங்கள் பிரதேசத்திலும் தென்னை சார்பாக ஏற்படும் பிரச்சினைகளான மானியம் வழங்குதல், பசளைப்பற்றாக் குறை, யானை, குரங்கு பிரச்சினைக்கான தீர்வுகள், மண் அகழ்வுகள், அதனால் தென்னந் தோட்டங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள், நீர்ப்பிரச்சினைகள் மற்றும் சங்க உறுப்பினர்களுக்கான நிலையான கைத்தொழில் வாழ்வாதாரம் சம்பந்தமாக கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளதாக தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தே. வைகுந்தன் அறிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் சனத்தொகையில்

# 4 வீதமான மக்களுக்கு

# 'டிமென்ஷியா' நோய்

### மனநல வைத்திய நிபுணர்கள் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**இலங்கையின் சனத்தொகையில் 4 வீதமானவர்கள் நினைவு இழப்பு எனப்படும் டிமென்ஷியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக மனநல வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.**

வயோதிபத்துடன் மூளை செல்கள் அழிவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக மனநல வைத்திய நிபுணர் என் குமாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முறையான உணவுப் பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலமும் தொடர்ந்து உடற்பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலமும் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களை கட்டுப்படுத்துவதன் மூலமும் இந்த நிலைமையை குறைக்க முடியும் என மனநல வைத்திய நிபுணர் என் குமாநாயக்க தெரிவித்துள்ளார். (நி-5)

### வறட்சியான காலநிலையால்

## தேயிலை, றப்பர் தோட்டங்கள் பாரியளவில் பாதிப்பு

(கொழும்பு)

வறட்சியான காலநிலை காரணமாக நாட்டின் பல பிரதேசங்களில், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன. வறட்சி காரணமாக குறித்த பகுதிகளில் உள்ள இறப்பர் தோட்டங்களில் இருந்து பெறப்படும் பாலின் அளவு குறைந்துள்ளதுடன் தமக்கான வருமானம் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளதாக இறப்பர் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தேயிலை தோட்டங்களும் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்காரணமாக தேயிலை தோட்டங்களில் விளைச்சல் வீழ்ச்சியடைந்துள்ளதாக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 160 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 450 | 550 |
| தக்காளி | 200 | 160 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| கோவா | 250 | 250 | 300 | 250 |
| கரட் | 350 | 450 | 450 | 450 |
| பூசணி | 80 | 120 | 100 | 100 |
| புடோல் | 80 | 80 | 100 | 160 |
| வாழைக்காய் | 200 | 200 | 240 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 200 | 240 |
| பாகற்காய் | 400 | 350 | 300 | 350 |
| வெண்டக்காய் | 100 | 120 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 150 | 180 | 200 |
| பயற்றங்காய் | 300 | 170 | 150 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 250 |
| பீற்றூட் | 120 | 100 | 150 | 150 |
| கறிமிளகாய் | 350 | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 200 |
| போஞ்சி | 350 | 450 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 180 | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 600 | 500 | 800 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 400 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 250 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 50 | 70 | 100 | 120 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2899

Search for people, places and things

### ரவி


பாக்டீரியாவோட படம் வரையச் சொன்னா வெள்ளைப் பேப்பரை கட்டி கொடுத்திருக்கியே ஏன்?



விபரம் புரியாம பேசாதீங்க ரீச்சர். இது கண்ணுக்குத் தெரியாத பாக்டீரியா.

### பிரியன்

மனைவி- போன்ல கொஞ்சம் வேலையா இருக்கேன். அடுப்ப கொஞ்சம் சிம்ல வையுங்கோ.




கணவன்- அட கிறுக்குப் பயபுள்ள. மொதல்லஉன் போன்ல இருக்கிற சிம்ம கழட்டி இடுப்புல வைக்கோணும். எந்த நேரம் பாரு வாட்ஸ் ஆப், யூடியூப்பு.

### சஞ்சய்


அப்பா-நான் உங்க அம்மாவை காதலிச்சதுக்காக என்னைக் கட்டி வைச்சு அடிச்சாங்க தெரியுமா..? மகள்- எதுலப்பா கட்டி வைச்சாங்க், யார்ப்பா அடிச்சது?



அப்பா- என்ன அடிக்கிறதுக்காகவே உங்க அம்மாவ கட்டி வைச்சாங்க.

### தர்சன்

பேசண்ட் :டாக்டர் எனக்குத்தான் எதுவும் இல்லையே. அப்புறம் ஏன் என்னை ICU ல வைச்சிருக்கீங்க.



டாக்டர்:உனக்கு எதுவும் இல்லைன்னு யார் சொன்னது. உனக்கு தாமபரத்துல ஒரு ப்ளாட். அண்ணா நகர்ல ரெண்டு பங்களா இருக்கே. எல்லாம் எனக்குத் தெரியும்

### வினோஜா




### கலை

முகநூல் நட்பு-முகம் தெரியாது,முகவரி தெரியாது, மதம் தெரியாது, மொழி தெரியாது, வயது தெரியாது, இவ்வளவு ஏன்? ஆம்பளயா, பொம்பளயானு கூடத் தெரியாது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 268





பூங்குழலி குதிரையின் அருகில் சென்று அதன் முகத்தைத் தடவிக் கொடுத்தாள். அதனால் மகிழ்ச்சி அடைந்ததைப் போல் குதிரை உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு சற்று இலேசாகக் கனைத்தது.

"உன்னை என் குதிரைக்குப் பிடித்துவிட்டது. இது மிக்க நல்லது." "என்ன விதத்தில் நல்லது?"

"நான் இலங்கைக்குப் போக வேண்டும். இந்தக் குதிரையை உன்னிடம் ஒப்புவித்து விட்டுப் போகலாம் என்று எண்ணுகிறேன். பார்த்துக் கொள்கிறாயா?"

"ஓ! பார்த்துக் கொள்கிறேன். எல்லா மிருகங்களும் என்னிடம் சீக்கிரம் சிநேகமாகிவிடும். மனிதர்களுக்கு மட்டுந்தான் என்னைக் கண்டால் பிடிக்காது."

"ஏன் அப்படிச் சொல்கிறாய்? சேந்தன் அமுதன் உன் பேரில்"

"எனக்கும் மிருகங்களின் பேரில்தான் பிரியம் மனிதர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது"

"மனிதர்கள் அப்படி என்ன உனக்குச் செய்து விட்டார்கள்?"

"மனிதர்கள் பொல்லாதவர்கள். பொய்யும் புனை சுருட்டுமே அவர்களுக்கு வேலை"

"எல்லோரையும் சேர்த்து அப்படிச் சொல்லிவிடக் கூடாது. சேந்தன் அமுதன் நல்லவன். இதோ வருகிறானே வைத்தியர் மகன். இவன் ரொம்ப நல்லவன்."

"நீ எப்படி?"

"நானும் நல்லவன்தான். என் பெருமையை நானே சொல்லிக் கொள்ளக் கூடாது அல்லவா?"

"நீங்கள் இருவரும் எதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள்?"

"சக்கரவர்த்திக்கு உடம்பு குணம் இல்லை அல்லவா? அவருடைய நோயைக் குணப்படுத்தச் சில மூலிகைகள் வேண்டியிருக்கின்றன. இந்தக் காட்டில் அபூர்வ மூலிகைகள் இருக்கின்றனவாமே? அதற்காகத் தான் வைத்தியர் மகனும் நானும் வந்திருக்கிறோம்"

"சற்று முன் இலங்கைக்குப் போக வேண்டும் என்று சொன்னாயே?"

"இங்கே கிடைக்காத மூலிகைகளை இலங்கையிலிருந்து கொண்டுவர வேண்டும். இலங்கையில் அனுமார் கொண்டு வந்த சஞ்சீவி பர்வதம் இன்னமும் இருக்கிறதாமே?"

"ஆமாம், இருக்கிறது அதனாலேதான் அங்கே ஆயிரக் கணக்கான ஜனங்கள் விஷக் காய்ச்சலில் இப்போது செத்துப் போய்க் கொண்டிருக்கிறார்கள்."

"அதுவும் அப்படியா? எனக்குத் தெரியாதே? எங்களை அனுப்பிய அரண்மனை வைத்தியருக்கும் அது தெரியாது."

"ஆண்பிள்ளைகளைப் போல் பொய் சொல்லுகிறவர்களை நான் கண்டதேயில்லை. இரண்டு நாளைக்கு முன் இரண்டு பேர் இங்கே வந்தார்கள். அவர்களும் இப்படித்தான் ஏதோ பொய் சொன்னார்கள். ஆனால் அவர்கள் சொன்னது கொஞ்சம் நம்பக் கூடிய பொய்யாக இருந்தது."

"அவர்கள் யார்? என்ன பொய் சொன்னார்கள்?"

"அவர்கள் தங்களை யாரோ மந்திரவாதி அனுப்பியதாகச் சொல்லிக் கொண்டார்கள். சக்கரவர்த்திக்கு ரட்சை கட்டுவதற்காகப் புலி நகமும், யானை வால் ரோமமும் வேண்டும் என்றும் அதற்காக இலங்கை போவதாகவும் சொன்னார்கள்.

அவர்களை அழைத்துக் கொண்டு என் அண்ணன் படகோட்டிக் கொண்டு இலங்கைக்குப் போயிருக்கிறான்"

"ஓ! ஓ! அதுவும் அப்படியா?" என்றான் வந்தியத்தேவன். அவனுக்கு ரவிதாஸன் என்னும் பயங்கர மந்திரவாதியின் நினைவு வந்தது. இரவில் படுத்திருந்த பாழும் மண்டபத்தில் அடைந்த பயங்கர அனுபவமும் நினைவுக்கு வந்தது.

'கடவுளே! இந்த மாதிரி காரியங்களிலெல்லாம் ஏன் சிக்கிக் கொண்டோம்? போர்க்களத்தில் நேருக்கு நேர் பகைவனுடன் நின்று போர் புரிய வேண்டும். (தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## ஒற்றுமை



ஒரு வயல் வரப்பில் மூன்று கொக்குகள் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருந்தன. எங்கு சென்றாலும் ஒற்று மையுடன் சென்றன. இரை தேடச் சென்றாலும் கிடைத்த இரையை கூடி பகிர்ந்து உணவு உண்டு வாழ்ந்து வந்தன.இந்த ஒற்றுமை மற்ற விலங்கினத்துக்கும் பறவைகளுக்கும் பொறாமையாக கூட இருந்தது.

நரிஒன்று, அந்த மூன்று கொக்குகளையும் பிரித்தே தீருவேன் என்று சபதமிட்டபடி களம் இறங்கியது.ஒருநாள் மூன்று கொக்குகளும் வயல் வரப்பில் இரை தேடிக் கொண்டிருந்தன. நரி தன் சூழ்ச்சியை பயன்படுத்த திட்டமிட்டது.

அதன்படி முதலில் மூன்று கொக்குகளிடமும் நட்பை ஏற்படுத்திக் கொண்டது.

சிறிது நாட்கள் சென்ற பிறகு, தனிமையில் இருந்த ஒரு கொக்கிடம் சென்றது.

"கொக்கு நண்பரே ! இவ்வளவு அழகாக இருக்கும் நீங்கள் அவலட்சணத்தின் ஒட்டு மொத்த உருவமா கதிகழும் உங்கள் நண்பர் கொக்குகளுடன் எப்படி நட்பு பாராட்ட முடிகிறது? உங்கள் அழகுக்கும் அந்தஸ்துக்கும் இது ஏற்ற காரியமா?" கேட்டது. இதனை கேட்ட கொக்குவிற்கு நரி சொன்னது உண்மையோ என்ற சந்தேகம் ஏற்பட, "என்ன செய்வது. எல்லாம் என் நேரம்" என்றது. வந்த காரியம் முடிந்த திருப்தியில் உடனே நரி அவ்விடம் விட்டு சென்றது.

நரி இப்போது இரண்டாவது கொக்குவிடம் சென்றது. "கொக்கு நண்பரே எப்படி "நலம் நரி நண்பரே", என்று பதிலுக்கு கூறியது கொக்கு. இரண்டாவது கொக்குவிடம் இப்போது தன் சூழ்ச்சியை தொடங்கியது நரி. "கொக்கு நண்பரே ! நீர் எவ்வளவு அறிவு உடையவர்.

எந்த குளத்தில் எவ்வளவு மீன்கள் உள்ளன என்பதை உம் அறிவால் கண்டுபிடித்து விடக் கூடியவர் நீர். அவ்வளவு அறிவு உடைய நீர் ஒன்றும் தெரியாத உங்கள் நண்பர் கொக்குகளுடன் நட்பு கொள்வதா?" என்று சூழ்ச்சியை கிளப்பி விட்டது. நரி கூறிய வார்த்தைகளால், இரண்டாவது கொக்குவிற்குள் சிந்தனை எட்டிப் பார்க்க நரிதான் வந்த வேலை முடிந்த திருப்தியில் கிளம்பிப் போனது. இதோடு நில்லாமல் மூன்றாவது கொக்குவிடம் சென்றது நரி. வழியில் மூன்றாவது கொக்கிடம், "கொக்கு நண்பரே! நீங்கள் எவ்வளவு வீரம் படைத்தவர். இரை பிடிப்பதிலும் பறப்பதிலும் எவ்வளவு வீரம் படைத்தவர். இவ்வளவு வீரம் உடைய நீங்கள் ஒன்றுக்கும் உதவாத உமது மற்ற 2 நண்பர் கொக்குகளுடன் சுற்றித் திரிந்ததில் உமது வீரமே உமக்கு மறந்திருக்குமே" என்று கொக்கிடம் கேட்டது.

நரியின் சூழ்ச்சியால் அந்த மூன்று கொக்குகளுக்குள் நாளடைவில் பகைமையும் யார் பெரியவன் என்ற சண்டையும் ஏற்பட்டன. ஒன்றுடன் ஒன்று சண்டை போட்டுக் கொண்டன. இதனால் ஒற்றுமையுடன் இருந்த மூன்று கொக்குகள் தனித்தனியே பிரிந்தன.

நடந்ததை கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்த கிளி ஒன்று, மூன்று கொக்குகளையும் சந்தித்து நரியின் சதித் திட்டத்தை சொல்லி முடித்தது. 'அடப்பாவி' எங்கள் ஒற்றுமைக்கு உலை வைத்து விட்டானே. நல்ல நட்பை இழந்தோமே என்று வருந்தின.

"முன்பின் தெரியாதவர் வந்து திடீரென தேவையில்லாமல் புகழ்ந்தால் அதற்கு மயங்கி விடக்கூடாது. அப்படி மயங்கும் பலவீனவீம் ஒருவருக்குள் இருந்தால் அவரை மற்றவர்கள் விரைவில் தங்கள் வசப்படுத்தி விட முடியும். உங்கள் மூவர் விடயத்தில் அது தான் நடந்தது.

இனியாவது இப்படி திடீர் புகழ்ச்சிக்கு மயங்காதீர்கள்" என்று அறிவுறுத்தியது கிளி அதற்கு பின் மூன்று கொக்குகளும் மறுபடியும் நட்புடன் இருந்து வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி,காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி கயிலை நாதனே போற்றி போற்றி.

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிறைசூடிய பெருமான் சந்திரனில் சிவசக்தி ஆக நின்றனன்

சந்திரனுக்கு இந்தியா அனுப்பிய சந்திரயான்-3 தரையிறங்கிப் பெரும் சாதனை படைத்துள்ளது.

23ஆம் திகதி ஓகஸ்ட் மாதம் 2023ஆம் ஆண்டு மாலைப் பொழுது நேரம் 6 மணி நான்கு நிமிடத்தில் சந்திரயான்-3 நிலவில் தரையிறங்கியது.

இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சியில் இஃது ஒரு மைல்கல் எனலாம்.

தவிர, உலக நாடுகள் இந்தியாவின் அபார வளர்ச்சி கண்டு வியந்துள்ளன.

ஆம், சந்திரனின் தென்பகுதியில் இதுவரை எந்த நாடும் தனது விண்கலத்தை அனுப்பவில்லை.

அந்தவகையில் இந்தியர்வே முதன் முதலில் சந்திரனின் தென்பகுதியில் தனது விண்கலத்தைத் தரையிறக்கியுள்ளது.

தவிர சந்திரயான்-3 அங்கிருந்து எடுத்து அனுப்புகின்ற புகைப்படங்கள் இயற்கையின் அற்புதத்தை எடுத்தியம்புகின்றன.

இதற்கும் மேலாக, நிலவில் இருக்கக் கூடிய பிரமிக்கத்தக்க அதிசயங்கள் இன்னும் வந்து சேரும் என எதிர்பார்க்கலாம்.

இவை ஒருபுறமிருக்க சந்திரனின் தென்பகுதியில் சந்திரயான்-3 தரையிறங்கிய இடத்துக்கு **சிவசக்தி** என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பெயர் சூட்டியுள்ளார்.

இந்த நாமத்தை அவர் கடந்த 26ஆம் திகதி சூட்டியுள்ளார்.

இங்குதான் பிறவாயாக்கைப் பெரியோன் என்று; சிலப்பதிகாரம் போற்றுகின்ற சிவப்பரம்பொருளின் பெருமை பற்றி நாம் வியக்கின்றோம்.

ஆம் பித்தா பிறைசூடிப் பெருமானே என்று சுந்தரமூர்த்தி நாயனார் தன் தேவாரத் திருமுறையில் பாடிப் பரவுகிறார்.

பித்தனாகிய சிவன் தன் தலையில் பிறையை அணிந்துள்ளான் என்ற சுந்தரரின் தேவாரத்துக்கு ஆதாரமாக ஞானசம்பந்தக் குழந்தை ...தூ வெண்மதி சூடி... என சிவனின் வடிவத்தை ஏலவே அடையாளப்படுத்தியுள்ளது.

ஆக, சந்திரனை தன் தலையில் அணிந்திருக்கின்றவன் சிவன் என்பது இங்கு நிரூபணமாகிறது.

அதிலும் சிவன் எப்போதும் தென்பகுதியை விரும்பி ஏற்பவன்.

ஆம், ஆடும் நடராஜப் பெருமான் தென்திசை நோக்கி வீற்றிருக்கின்றான். ஞானத்தை உபதேசிக்க வல்ல தெட்சணாமூர்த்தி தென்முகக் கடவுளாக வீற்றிருந்து உபதேசம் செய்கிறார். இதனாலன்றோ தென்னாடுடைய சிவன் என்று சிவனின் இருப்பிடத்தை நம் ஞானிகளும் யோகிகளும் போற்றினர்.

இவ்வாறாக தென்புலத்தை விரும்பி ஏற்ற சிவப்பரம்பொருளின் திருநாமம் சந்திரனின் தென்பகுதிக்கும் சூட்டப்பட்டுள்ளதென்பது ஆச்சரியமானதே.

என்னே! விந்தை. சந்திரனின் தென்பகுதிக்கு **சிவசக்தி** என்ற தமிழ் நாமம் சூட்டப்பட்டிருப்பதும் சந்திரயான்-3 அங்கிருந்து எடுத்து அனுப்புகின்ற புகைப்படங்கள் நம் சித்த யோகிகள் ஞானத்தில் உய்த்துணர்ந்த கோள்கள், கிரகங்கள், அவற்றின் அசைவுகள் அவை பூமியில் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் என அனைத்தும் மெய்மையானவை என்பதையும் நிரூபித்து நிற்பதைப் பார்க்கும் போது, இப் பிரபஞ்சத்தின் அத்தனை அசைவுகளுக்கும் நடராஜப் பெருமானின் திருநடனமே மூல காரணம் என்பது மனம் கொள்ளத்தக்கது.

# போதைப்பொருள் கடத்தலினால் சிறுவர்கள் ஆபத்தான நிலையில்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தலினால் எமது நாட்டின் சிறுவர்களும் பாடசாலைகளும் ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஈஸி கேஷ் போன்ற முறைமைகள் மூலம் இவ்வாறான போதைப்பொருள் சம்பவங்களுக்கு பாடசாலை மாணவர்கள் அடிமையாவதாக கிராமப்புற மற்றும் நகர்ப்புற பாடசாலைகளுக்கு செல்லும் போது பெற்றோர்கள் குற்றம் சுமத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறுவர்கள் தொடர்பான பாராளுமன்றக் குழுக் கூட்டத்தின் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், பாடசாலை மற்றும் மாணவர்களிடம் இருந்து போதைப்பொருள்களை அகற்றுவதற்கான அவசர வேலைத் திட்டம் தேவை.

சிறுவர்களை மையமாகக் கொண்ட போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான கடுமையான சட்ட அமைப்பு மற்றும் வேலைத் திட்டம் தேவை. தனியொரு உருவாக்கம் தேவை. பாடசாலை மாணவர்களை பாதுகாக்க வேண்டும்.

அத்துடன், எமது நாட்டில் சிறுவர் உரிமைகள் எந்தளவுக்கு சட்ட விதிகளாக மாற்றப்பட்டுள்ளன என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

அந்த சிறுவர் உரிமைகளுக்கு மேலதிகமாக அடிப்படை உரிமைகளுடன் தாய் உரிமை என்ற தனி அலகையும் சேர்க்க வேண்டும்.

தாய்மார்களும் பிள்ளைகளும் எமது சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய பிரிவினராக இருப்பதால் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அவர்களை அடிப்படை உரிமைகளில் உள்வாங்க வேண்டும் என தெரிவித்தார். (ம-7)

## 15 வயது சிறுவன் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியாவில் 8 வயது சிறுவன் ஒருவனை துஷ்பிரயோகம் செய்ததாக 15 வயது சிறுவ்ன் ஒருவர் வவுனியா பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை முடிவடைந்து மேலதிக வகுப்புக்காக வவுனியா, வெளிக்குளம் பகுதிக்கு சென்ற 8 வயது சிறுவன் ஒருவனை அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து நேற்று முன்தினம் மாலை 15 வயது சிறுவன் ஒருவன் துஸ்பிரயோகம் செய்துள்ளார்.

இதன் பின், 8 வயது சிறுவன் வீடு சென்ற பின் தனக்கு நடந்த சம்பவத்தை வீட்டிற்கு தெரியப்படுத்தியதையடுத்து குறித்த சிறுவன் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் இரவு அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் வைத்தியசாலை பொலிஸாருக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து 15 வயது சிறுவன் வவுனியா பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த வவுனியா பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ம-7,250)

## துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

வெல்லம்பிட்டி - கித்தம்பஹுவ பிரதேசத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் மோதரை பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

முச்சக்கர வண்டியில் பயணித்த குறித்த நபர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தால்துவ தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வெல்லம்பிட்டி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-7)

## முழுமதி அறிவியல் அரங்கம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலைய ஸ்தாபகர்களில் ஒருவரும் மூத்த வைத்திய கலாநிதியும் தூதன் பத்திரிகை ஸ்தாபகருமான அமரர் எம்.வி முருகேசு ஞாபகார்த்த முழுமதி அறிவியல் அரங்கம் இன்று செவ்வாய்க்கிழைமை மாலை 6 மணிக்கு நிலைய முன்றலில் விளையாட்டுக்குழுத் தலைவர் திருச்செல்வம் சுஜீபன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ஜெயரட்ணம் டொனால்சுகந்தராஜ்கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)

## நீரில் மூழ்கிய இளைஞன் பலி

(லிந்துலை)

லிந்துலை - வோல்ட்றீம் பகுதியில் விறகுதேடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். குறித்த பகுதியில், உள்ள காட்டுப்பகுதிக்கு அவர் தனது நண்பர்களுடன் விறகு தேடச் சென்றுள்ளார்.

இதன்போது, இந்த பகுதியில் உள்ள ஓடையில் குளிப்பதற்காக இறங்கியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பின்னர் அவர் நீரில் மூழ்கிகாணாமல் போனதுடன், பொலிஸ் மற்றும் பிரதேசவாசிகளின் உதவியுடன் சென் கூம்ஸ் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனே சடலமாக மீட்கப்பட்டார். (ம-7,9)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தின் வருடாந்த இரத்த தான முகாம்-2023 இன்று (29) மற்றும் நாளை மறுதினம்வியாழக் கிழமை என இரு தினங்களாக கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் காலை 9.00 மணிதொடக்கம் மாலை 2 மணி வரை இடம்பெறவுள்ளது.

எனவே இக் குருதிக் கொடை நிகழ்வின் மூலம் உயிர்காக்கும் பணியில் இணையுமாறு கோரப்பட்டுள்ளது. (ம-7,9)

## விமான நிலையங்களுக்கருகில் பட்டம் பறக்க விடத் தடை விதிப்பு

(கொழும்பு)

இரத்மலானை, கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்களை அண்மித்த பகுதிகளில் பட்டங்கள் பறக்கவிடப்படுவதன் மூலம் பயணிகள் விமானங்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்பதால் இப்பகுதிகளில் பட்டம் பறக்கவிடுவது தடை செய்யப்பட வேண்டும்என விமான நிலைய அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சிலோன் ஏர் நேவிகேஷன் ரெகுலேஷன்ஸ் 1955 ஏர் நேவிகேஷன் ரெகுலேஷன்ஸ்ஆக்ட்1955 இன் பிரிவு 248ன் படி, பட்டம் அல்லது ஏதேனும் வானில் பொருள் பறக்கவிடப்பட்டால், சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்தின் எழுத்து பூர்வ ஒப்புதல் இருக்க வேண்டும்.

ஐந்து கிலோமீட்டர் சுற்றளவில் 300 அடி அல்லது அதற்கு மேற்பட்ட உயரத்தில் காத்தாடிகளை பறக்கவிடுவதும்ஆளில்லா விமானங்களை பறக்கவிடுவதும் தடை செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய ஆணையம் தெரிவித்துள்ளது.

காத்தாடிகளை பறக்கவிட பயன்படுத்தப்படும் தடிமனான கயிறு வான்வெளிக்கு அச்சுறுத்தலாக உள்ளது. எனவே கட்டுநாயக்கா, மத்தள, யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு ஆகிய நகரங்களைச் சுற்றியுள்ள வானில் பட்டம் பறக்க விடுவதைத் தவிர்க்குமாறு நிர்வாகம் அறிவித்தல் விடுத்துள்ளது.

குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் பொழுது போக்காக இருக்கும் பட்டம் பறக்கவிடுவதற்கு இந்த அறிவிப்பு முற்றிலும் எதிரானது அல்ல என்றும், விமானப்பயணிகளின் உயிருக்கு ஆபத்து கருதி எடுக்கப்பட்ட முடிவு என்றும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.(ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

18

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்: எல்லை நிர்ணய ஆணைக்குழு.

மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அட்டவணை - அ

| ஆண்டு | முக மதிப்பு GDP | உண்மை மதிப்பு GDP | GDP மாற்றம் | தனிநபர் GDP | சனத் தொகை |
|---|---|---|---|---|---|
| 2017 | $87,357,205,923 | $82,547,720,664 | 3.31% | $3,907 | 21,128,032 |
| 2016 | $81,787,420,023 | $79,903,861,972 | 4.47% | $3,801 | 21,021,171 |
| 2015 | $80,604,080,689 | $76,485,840,044 | 5.01% | $3,658 | 20,908,027 |
| 2014 | $79,356,449,841 | $72,838,327,290 | 4.96% | $3,504 | 20,788,511 |
| 2013 | $74,317,806,538 | $69,395,808,983 | 3.40% | $3,358 | 20,663,046 |
| 2012 | $68,434,409,315 | $67,116,705,113 | 9.14% | $3,269 | 20,532,600 |
| 2011 | $65,292,753,006 | $61,493,396,999 | 8.40% | $3,015 | 20,398,497 |
| 2010 | $56,725,749,222 | $56,725,749,222 | 8.02% | $2,800 | 20,261,737 |
| 2009 | $42,066,217,872 | $52,516,077,579 | 3.54% | $2,610 | 20,123,508 |
| 2008 | $40,713,812,310 | $50,721,102,373 | 5.95% | $2,538 | 19,983,984 |
| 2007 | $32,350,248,411 | $47,872,638,203 | 6.80% | $2,413 | 19,842,044 |
| 2006 | $28,279,814,925 | $44,825,899,741 | 7.67% | $2,276 | 19,695,972 |
| 2005 | $24,405,791,045 | $41,633,334,151 | 6.24% | $2,130 | 19,544,988 |
| 2004 | $20,662,525,941 | $39,187,357,999 | 5.45% | $2,021 | 19,387,153 |
| 2003 | $18,881,765,437 | $37,163,768,055 | 5.94% | $1,933 | 19,224,037 |
| 2002 | $16,536,535,647 | $35,079,926,055 | 3.96% | $1,840 | 19,062,482 |
| 2001 | $15,749,753,805 | $33,742,158,886 | -1.55% | $1,784 | 18,911,730 |
| 2000 | $16,330,814,180 | $34,271,798,041 | 6.00% | $1,825 | 18,777,601 |
| 1999 | $15,656,327,860 | $32,331,874,830 | 4.30% | $1,732 | 18,663,284 |
| 1998 | $15,794,972,847 | $30,998,760,577 | 4.70% | $1,670 | 18,564,599 |
| 1997 | $15,091,913,884 | $29,607,667,122 | 6.41% | $1,603 | 18,470,900 |
| 1996 | $13,897,738,375 | $27,825,342,704 | 3.80% | $1,515 | 18,367,288 |
| 1995 | $13,029,697,561 | $26,806,697,009 | 5.50% | $1,469 | 18,242,912 |
| 1994 | $11,717,604,209 | $25,409,170,950 | 5.60% | $1,404 | 18,094,477 |

### கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) விகிதம்

மறுநிதியளிப்பு இல்லாமல், பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறு விளைவிக்காமல் கடனுக்கான வட்டியைத் தொடர்ந்து செலுத்தக்கூடிய ஒரு நாடு பொதுவாக நிலையானதாகக் கருதப்படுகிறது. அதிக கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) விகிதத்தைக் கொண்ட ஒரு நாடு பொதுவாக வெளிப்புறக் கடன்களைச் செலுத்துவதில் சிக்கலைச் சந்திக்கும்.

கடன்-GDP விகிதம் என்பது ஒரு நாட்டின் பொதுக் கடனை அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் (GDP) ஒப்பிடும் அளவீடு ஆகும். கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் ஒரு குறிப்பிட்ட நாடு அது தான் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனை நம்பத் தகுந்த முறையில் குறிக் கிறது. பெரும்பாலும் ஒரு சதவீதமாக வெளிப்படுத்தப்படுகிறது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியை கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டால், கடனைத் திருப்பிச் செலுத்த எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று கடன்-GDP விகிதத்தின் மூலம் விளக்கலாம்.

கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் அதிகமாக இருந்தால், நாடு தனது கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான வாய்ப்புகள் குறைவாகவும் கடனைத் திருப்பிச் செலுத்தும் ஆபத்து அதிகமாகவும் உள்ளது. இது உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் நிதி பீதியை ஏற்படுத்தக்கூடும். எனவே வெளிநாட்டிடம் கடன் பெறுவது கடினமாகும்.


கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்திற்கான சூத்திரம் மற்றும் கணக்கீடு, கடன் - GDP விகிதம் பின்வரும் சூத்திரத்தால் கணக்கிடப்படுகிறது.

$$\text{மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கடன்} = \frac{\text{நாட்டின் மொத்தக் கடன்}}{\text{நாட்டின் மொத்த GDP}}$$

இலங்கை நீண்ட காலமாக கடன் வலையில் சிக்கித் தவித்து வருகிறது. இலங்கையின் கடன் - மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் வருடா வருடம் அதிகரித்தே செல்கின்றது. உதாரணமாக 2015 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் கடன்- மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 77.65% ஆக இருந்தது. இது 2014 ஐ விட 6.32% அதிகரித்துள்ளது. 2014 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் கடன்- மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 71.33% ஆக இருந்தது. இது 2013 ஆம் ஆண்டை விட 0.51% அதிகமாகும். 2013 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் கடன்- மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 70.82% ஆக இருந்தது. இது 2012 இல் இருந்து 2.11% அதிகரித்துள்ளது. 2012 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் கடன்- மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 68.71% ஆக இருந்தது. இது 2011 இல் இருந்து 2.4% வீழ்ச்சியாகும்.

1950 முதல் 2020 ஆண்டு வரையான இலங்கையின் கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தை உரு-2 காட்டுகிறது.

இலங்கையின் கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2014-2020 உரு-2





2014 ஆம் ஆண்டில், இலங்கையின் கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்துடன் ஒப்பிடுகையில் 30 சதவீதம் அதிகரித்து இருந்தது. அது 2018 ஆம் ஆண்டிலேயே, 91 சதவீதமாக உயர்ந்தது. அதுவே 2021 இல் 119 சதவீதமாக அதிகரித்துள்ளது. உலக வங்கியின் ஆய்வின்படி, இலங்கை போன்ற வளரும் நாடுகளுக்கான கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் சுமார் 65 சதவீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது. இதற்கு மேல் அதிகரித்தால் ஒவ்வொரு புள்ளி அதிகரிப்பும் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாதகமான விளைவை ஏற்படுத்தும் எனக் கணித்துள்ளனர்.

இதுவே இந்தியாவுடன் ஒப்பிட்டால், இந்தியாவின் கடன் சுமை 620 பில்லியன் டொலர் ஆகும். கடன் - ஜிடிபி விகிதம் 19.9 சதவீதம். அதாவது, இந்தியா சிறப்பான நிலையில் உள்ளது. இலங்கை போன்ற நிலைமைகள் இந்தியாவுக்கு ஏற்பட வாய்ப்பில்லை என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

### இலங்கையின் பொருளாதார வரலாறு

இலங்கையின் பொதுக் கடன்
Public debt in Sri Lanka




பழங்காலம் முதலே ஒன்பது இரத்தினங்கள், யானைத் தந்தம், முத்துகள் போன்ற பொருட்களுக்குப் புகழ் பெற்ற இலங்கை, குடியேற்ற காலத்தில் கறுவா, தேயிலை, இறப்பர், தென்னை போன்ற வர்த்தகப் பயிர்களுக்கு பெயர் பெற்று விளங்கியது. இலங்கை 1948 இல் விடுதலை பெற்ற பின்னர், முதலாளித்துவ பொருளாதாரத்தைச் சிறிது காலமே பின்பற்றிய போதிலும் அது ஆசியாவிலே மிக முன்னேற்றகரமான பற்பல சமூகநல நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

ஆனால் 1956 ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் முழுக்க முழுக்க சமவுடைமை பொருளாதாரத்தையே கைக்கொள்ளத் தொடங்கியது. சமவுடைமை அல்லது சமூகவுடைமை (Socialism) என்பது ஒரு அரசியல்-பொருளியல் கோட்பாடு. பொருளாதார நிர்வாகத்தில் கூடிய அரச பங்களிப்பை வலியுறுத்துகின்றது.

1977ஆம் ஆண்டுக்குப் பின்னர், தனியார்மயப்படுத்தலில் ஈடுபட்டுள்ளதுடன், திறந்த சந்தைப் பொருளாதாரக் கொள்கையையும் ஏற்றுமதி சார்ந்த வர்த்தகத்தையும் நோக்கி நகர்ந்துள்ளது. தற்போது மிகை இயங்குநிலையிலுள்ள துறைகளாவன, உணவுப்பொருள் உற்பத்தி, ஆடை உற்பத்தி, உணவும் குடிவகைகளும் தொலைத்தொடர்பு, காப்புறுதி, வங்கித் துறைகளாகும்.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோ.சைக்கிளி...

புதுக்குடியிருப்பில் இருந்து தேவிபுரத்தில் உள்ள வீட்டிற்கு, தனது மச்சானுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தார்.

இதன்போது வீதியில் சென்ற முச்சக்கரவண்டியை முந்துவதற்கு முயற்சித்தவேளை, மோட்டார் சைக்கிளின் கைபிடி முச்சக்கரவண்டியில் தட்டுப்பட்டது. இதன்போது அவர்கள் இருவரும் கீழே விழுந்தபோது குறித்த பெண் சம்பவ இடத்தில் படுகாயமடைந்து மயக்கமுற்றார்.

இதனையடுத்து குறித்த பெண் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, அங்கிருந்து மாஞ்சோலை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, இறுதியாக 25ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை 1.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,9,33,104)

## தையிட்டியில்...

வாய்க்கிழமை பி.ப 4.00 மணிக்கு ஆரம்பித்து, புதன்கிழமை 30.08.2023 மாலை 7.00 மணிக்கு நிறைவுபெறவுள்ளது.

எமது மக்களின் எதிர்ப்பைக் காட்ட அனைவரையும் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் அறிவித்துள்ளனர். (ம-7,9,104)

## யாழில்...

யாழ்.மாவட்டத்தில் வீடுகளுக்குள் இரவு வேளைகளில் கூரையினை பிரித்து வீட்டுக்குள் இறங்கி வீட்டில் உள்ளவர்களை அச்சுறுத்தி கத்தியைக் காட்டி நகைகளை கொள்ளை அடித்து செல்லும் சம்பவங்கள் கடந்த வாரங்களில் இடம்பெற்றிருந்த நிலையில்,

குறித்த விடயம் தொடர்பில் அந்தந்த பொலிஸ் நிலையங்களில் ஐந்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில்,

மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தின் வழிகாட்டுதலின் கீழ் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தெ.மேனன் தலைமையிலான அணியினரால் குறித்த திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய நல்லூர் பின் வீதியைச் சேர்ந்த நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு திருடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் சங்கிலியன் வீதி பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை அரச உத்தியோகத்தரின் வீட்டுக்குள் புகுந்து கத்தியைக் காட்டி மிரட்டியமை, கல்வியங்காட்டுப் பகுதியில் கிறிஸ்தவ மதகுரு ஒருவரை கத்தி காட்டி மிரட்டி பணம் கொள்ளை அடித்தமை மற்றும் பாற்பண்ணைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்து கத்தியைக் காட்டி மிரட்டி நகைகளை கொள்ளை அடிக்க முயன்றமை,

இணுவில் பகுதியில் வயோதிபர்கள் இருந்த வீட்டுக்குள் புகுந்து கத்தியைக் காட்டி நகையை கொள்ளை அடித்தமை போன்ற குற்றச் சாட்டுக்களுடன் தொடர்புடைய 4 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து சங்கிலியன் வீதிப் பகுதியில் கொள்ளையடிக்கப்பட்ட 24 பவுண் நகைகளும் மீட்கப்பட்டுள்ளதோடு இணுவில் பகுதியில் திருடப்பட்ட நான்கு பவுண் நகையும் திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட ஒரு மோட்டார் சைக்கிள், வாள், நான்கு கையடக்க தொலைபேசிகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின்போது நல்லூர் பின் வீதியால் செல்லும் வயது முதிர்ந்தவர்களை மிரட்டி கைத்தொலைபேசி, சிறிய தொகை பணம் திருடும் சம்பவத்திலும் குறித்த சந்தேகநபர்கள் ஈடுபட்டுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7,9,33,104)

## அங்கப்...

வயதானவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் உயிரிழப்புக்கான காரணம் மரண விசாரணையின் பின்னரே தெரியவரும்.

சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,60)

## வடக்கு, கிழக்கை...

வர் எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு வளங்களை பாதுகாப்பதற்கான போராட்டமே இரண்டாவது சுதந்திரப் போராட்டமாகும்.

வடக்கு, கிழக்கு தமது தாயகம் என தமிழ் மக்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக கூறுகின்றனர். இவர்கள் ஏன் இரு பகுதிகளை மட்டும் தாயகமாக கருத வேண்டும். முழு நாடும் எமது தாயகம் என கருதுங்கள். நாம் அனைவரும் இலங்கையர்கள்.

யாழ். நாகதீபம் எமது பகுதி என நாம் உரிமை கோரவில்லையா? அது போல தமிழ் மக்களும் முழு இலங்கையும் தமக்கானது என எண்ண வேண்டும்.

இன்று எமது நாட்டு வளங்கள் சுரண்டப்படுகின்றன. தேசிய சொத்துக்கள் விற்கப்படுகின்றன. சொந்த நாட்டிலேயே வாடகைக்காரர்கள் போல் வாழ வேண்டிய நிலைமை. இந்நிலைமை மாற வேண்டும்.

இந்நாடு எமது உரிமை. அதற்கு நாம் சொந்தக்காரர்கள் என்ற எண்ணம் நாட்டு மக்களுக்கு வர வேண்டும். அப்போதுதான் எமது மரபுரிமைகளைக் காக்கலாம். வளங்களை காப்பதற்கான 2ஆவது சுதந்திர போராட்டத்துக்கு அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து ஆதரவு வழங்க வேண்டும்.

அனைத்து தலைவர்களும் ஒன்றிணைந்ததன் மூலம் நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுக்கப்பட்டது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

தொல்பொருள் என்பது ஒரு இனத்துக்குரியது அல்ல. ஒரு பழைமையான ஆலயம் இருந்தால் அதனையும் அனைவரும் பாதுகாக்க வேண்டும். வடக்கு, கிழக்கில் உள்ள தொல்பொருட்களை பாதுகாக்குமாறு தமிழ் மக்களிடம் நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

கடந்த 75 ஆண்டுகளாக தமிழரோ, சிங்களவர்களோ வெற்றி பெறவில்லை. மாறாக கலவர பூமியில் தான் மோதிக் கொண்டோம்.

வடக்கிலும், தெற்கிலும் உள்ள அரசியல்வாதிகளின் சூழ்ச்சிக்குள் சிக்கிவிட வேண்டாம்.

இலங்கையர் என்ற முறையில் நாம் அனைவரும் பிரதேச இனவாதமின்றி இந்நாட்டை கட்டியெழுப்புவோம் எனவும் தெரிவித்தார். (ம-7)

## ரணில் அரசுக்கு...

வித்து அரசுக்கு எதிராக கொழும்பில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னால் நேற்று திங்கட்கிழமை இந்த போராட்டம் இடம்பெற்றது.

குறித்த போராட்டம் தொடர்பில் கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டது.

காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கி ஆகியவற்றிற்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரவேசிப்பதைத் தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று அரசுக்கு எதிராக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த இடத்தில், பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். (ம-7)

### மெகா பவர்

திகதி 28/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1568
N 04 | 04 16 41 68
08809

### தன நிதானய

திகதி - 2023.08.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1250
M 02 25 39 79 M
15397

### லக்கி 7

திகதி 28.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0046
L7 இலக்கம் 0 6
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 5 4 7 8 3 2

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3462
சீட்டிழுப்பு திகதி 28.08.2023
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 03 17 31 75
K
06069

### ஹந்தஹன (HANDAHANA)

சீட்டிழுப்பு திகதி 2023.08.28
சீட்டிழுப்பு இலக்கம் 529
விருச்சிகம் 10 12 38 59 விருச்சிகம்

### மஹஜன சம்பத

திகதி 2023/08/28
சீட்டிழுப்பு இலக்கம் 5220
ஆங்கில எழுத்து 0
வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 0 8 7 5 8

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2194 | வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.08.28 | தினம் திங்கட்கிழமை
06 25 27 45 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,593,956.40
17298 | 693

### சனிதா

திகதி 2023.08.28 | வெற்றி வாரம் 4355 | வர்ணம் இளம் நீலம்
08 14 43 60 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,688,604.00
39406 | 943
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 3906 | வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.28 | தினம் திங்கட்கிழமை
28 40 45 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,581,436/-
23456 | 123

### சுபர்

திகதி 28.08.2023 | வெற்றி வாரம் 1370 | வர்ணம் பசுமை
I 05 34 48 50 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 433,429,664.20
72037 | 956
தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ஜயோதா (Jayoda)

திகதி 2023.08.28 | வெற்றி வாரம் 1951 | வர்ணம் செம்மஞ்சள்
03 50 52 64 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.45,675,715.20
28343 | 700
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2020
சீட்டிழுப்பு திகதி: 2023.08.28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,445,808/-
15 29 68 76 G
99122 | 840

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெண்காட்டில் இன்று தேர்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயத் தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும்.

காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூஜை இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணிப்பார். (ம)

## இலங்கை...

யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகி, ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவை அமர்வின் தொடக்க நாளான செப்டெம்பர் 11 ஆம் திகதி ஏற்கனவே இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட 51கீழ் 1 தீர்மானத்தின் உள்ளடக்கங்களின் நடைமுறையாக்கத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் எழுத்து மூல அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து இலங்கை தொடர்பான கலந்துரையாடலொன்றும் நடைபெறும்.

இவ்வாறானதொரு பின்னணியில் பிரித்தானியா தலைமையிலான அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, வட மெசிடோனியா, மாலாவி மற்றும் மொன்ரனேக்ரோ ஆகிய இணையனுசரனை நாடுகள் இலங்கை தொடர்பில் ஆராயும் நோக்கில் எதிர்வரும் வாரம் மெய் நிகர் முறைமையிலான சந்திப்பொன்றை ஏற்பாடு செய்வதற்குத் திட்டமிட்டுள்ளன.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொள்ள விருப்பதுடன் இதில் பங்கேற்பதற்கு மேலும் சில சிவில் சமூகப்பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்போது இலங்கையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக அதற்கு எதிர்மறையான சூழ்நிலையொன்று அரசாங்கத்தினால் தோற்றுவிக்கப்பட்டிருப்பதாக இணையனுசரணை நாடுகளின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைக்கப்படஉள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்களை நடத்துவதில் நிலவும் காலதாமதம் மற்றும், வட கிழக்கு மாகாணங்களில் தொடரும் நில அபகரிப்பு, குருந்தூர் மலை, தையிட்டி உள்ளிட்ட பகுதிகளில் பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் என்பன உள்ளடங்கலாக அண்மைய காலங்களில் நாட்டில் இடம் பெறும் அடக்குமுறைகள் குறித்தும் அவர்களுக்கு விளக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## சட்டவிரோத...

பட்ட 15 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த வகையில், கடந்த 25, 26 ஆம் திகதிகளில் திருகோணமலை, லங்காப் பட்டினம், குச்சவெளி மற்றும் யாழ் அண்மித்த கடல் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின் போது தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகள் மற்றும் மின் உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு கொண்டிருந்த 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 6 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் 17 முதல் 38 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அவர்கள் திருகோணமலை, ஈச்சிலம்பற்று, குச்சவெளி மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் கடற்படை தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்களை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திருகோணமலை, காட்பே, குச்சவெளி மற்றும் யாழ்ப்பாணம் மீன்பிடி ஆய்வாளர்கள் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஆளுநர்...

கிழக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்த பிக்குகள், திருகோணமலை - நிலாவெளி, பெரியகுளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருந்த விகாரையின் நிர்மாண பணிகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கடும் தர்க்கத்தில் ஈடுப்பட்டுள்ளனர்.

இதன்போது அனுமதி வழங்கவில்லை என்றால் தாம் தீக்குளித்து இறப்பதற்கும் தயாராகவுள்ளதாக பிக்குகள் ஆளுநரை மிரட்டியுள்ளனர்.

திருகோணமலை - நிலாவெளி, பெரியகுளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருந்த விகாரையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கோரி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக பிக்குகள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

குறித்த விகாரை நிர்மாணிப்பதால் காணப்படும் பிரச்சினை குறித்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குகளுக்கு அரச அதிபர் அலுவலகத்தில் வைத்து ஆளுநரால் விளக்கம் அளிக்கப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டம் அனைத்து இன மக்களும் வாழும் ஒரு மாவட்டமாகும். பிக்குகளின் செயற்பாடுகள் போல் ஏனைய இனத்தவரும் இவ்வாறான தொரு செயற்பாடுகளை முன்னெடுப்பார்களானால் அதற்கு நீங்களே ஒரு முன்னுதாரணமாக செயற்படுவீர்கள் என்றும் ஆளுநர் இதன்போது தெரிவித்தார்

பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தை மீளப்பெற்றாலும் பிரதேச சபையின் அனுமதியின்றி எந்த ஒரு கட்டுமானப்பணிகளும் முன்னெடுக்க முடியாதெனவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் பிரதேச செயலகத்தில், திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்களால் இக்கூட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16840)
076 825 7716 (ஆகாஸ்)

விசா விண்ணப்பம்
கனடா பிரான்ஸ் லண்டன்
ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா, பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்
கனடாவில் வேலைவாய்ப்பு 10 விசாக்கள் மட்டும் கையிருப்பு உள்ளது முடிவுத்திகதி (30.08.2023)
AIRR VISA CENTRE, 197 MAIN STREET JAFFNA.
077 266 6429, 021 221 0599
077 877 4838 (16870)

www.edus.lk
EDUS Learning made lovable
இலகுவில் ஆங்கிலம்..!
"ENGLISH 360"
தரம் 6 - 11 வரையான மாணவர்களுக்கான விஷேட சர்வதேச தரத்திலான வகுப்புக்கள்.
செப்டம்பர் 1 முதல் ஆரம்பம்.
ZOOM மற்றும் VIDEOS மூலமான கல்வி..!
காலத்தின் தேவைக்கு ஏற்ப விஷேடமாக வடிவமைக்கப்பட்ட ஒரு வருட பூரண கற்கைநெறி...!
மாதாந்தம் ரூ.500 மட்டுமே.
APPLY NOW



முக்கிய அம்சங்கள்
அடிப்படையிலிருந்து ஆரம்பம்.
இலக்கு கற்றலுக்கான வழிமுறைகள்.
அங்கீகாரம் பெற்ற பல விரிவுரையாளர்கள்.
மாதாந்த மொழித்திறன் விருத்தி செயற்பாடுகள்.
வெளிநாட்டவர்களினூடான பயிற்சிநெறி கற்றல்.
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணையலாம்.
கற்கைநெறி முடிவில் சான்றிதழ்.
மொழியினை இயல்பாக கற்றிட ஓர் அரிய சந்தர்ப்பம்.
கற்கைநெறி முடிவில் ஆங்கிலம் சரளமாகுவது நிச்சயம்.
VOCABULARY SPOKEN GRAMMER WRITTEN
இணைய விரும்பும் மாணவர்கள்:
பெயர், பாடசாலை, தரம், WhatsApp இலக்கம் குறிப்பிட்டு கீழுள்ள எமது வங்கியில் ரூ.500 வைப்பிலிட்டு பற்றுச்சீட்டுடன் 0777123330 இலக்கத்திற்கு அனுப்புங்கள். உடனடியாக பதிவு உறுதிசெய்யப்பட்டு வகுப்பில் இணைக்கப்படுவீர்கள்.
BOC - EDUS LANKA (PVT) LTD - 87979133 - KOKUVIL
www.edus.lk
மேலதிக விபரங்களுக்கு:
070 222 1012
(C-7152)

காணி விற்பனைக்கு
கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (16878)
077 728 6061

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
T.P: 0777 55 45 28
321, K.K.S. Road, Jaffna. (16879)

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777 (C-7153)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com (C-7153)

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
● கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
● நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
● செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
● 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
● பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை
தொடர்புகளுக்கு:- குரு
076 755 8606,
077 874 3204, 077 288 0152 (16880)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 91, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org